
# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை


தேசம் □ இதழ் 27 □ ஏப்ரல் 06 - யூலை 06 □ ISSN 1474 - 8770 □ www.thesamnet.com

## அரசியல் கைதிகளும் சித்திரவதையும் பக்.19





## 'தியாகச் செம்மல்' தயா




## ஜேவிபி தமிழ் மக்களுக்கு தீங்கிழைத்ததை நிரூபித்தால் நான் அரசியல் செய்வதை கைவிடுகிறேன்

சோமவன்ச அமரசிங்க : சிறப்புப் பேட்டி பக்.3

# Low Cost
# Accomodations in London

**Finchley Rd, Archway, Holloway Rd**
**Tube Stations அருகாமையில்**

☆ Flats

☆ Studios

☆ Rooms

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவீடங்கள் வாடகைக்கு உண்டு.
சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

**மாத வாடகை £400 - £600**

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - Standing Order மூலம் செலுத்த வேண்டும். D.S.S ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**Tel \ Fax : 020 8905 0452**
**Email : tarrin@desilugroup.com**
**Web : www.desilugroup.com**

Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies
**Collingwood Business Centre, Mercers Rd, London N19 4PU**

உள்ளே

01 எட்டாத தூரத்தில் சமாதானம் **தேசத்தின் பார்வை**

02 'தியாகச் செம்மல்' தயா **ரி கொன்ஸ்ரன்ரைன்**

04 தமிழர் விடுதலையும் கூட்டணி அரசியலும் **ச முருகையா**

05 இதைவிடக் கூடாது **ரி கொன்ஸ்ரன்ரைன்**

06 நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ

07 யாழ் நூலகத்தில் நின்று ஒரு ஹொலிடே பொட்டோ **என் செல்வராஜா**

09 உருவாக்குமை **ரா சு பொதுமகன்**

14 விடிய விடிய கதையாடிய ஒன்றுமில்லாத மண் **ஆர் புதியவன்**

18 மீண்டும் அதே கேள்வி: நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? **சபா நாவலன்**

19 அரசியல் கைதிகளும் சித்திரவதையும் **கோபால்**

25 பெண் விடுதலையின் யதார்த்தம் **விஜி**

28 இலங்கையில் சமாதானச் செயற்பாடுகளின் எதிர்காலம்

29 சோமவன்ச அமரசிங்க: சந்திப்பு **த ஜெயபாலன்**

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# எட்டாத தூரத்தில் சமாதானம்

கோழியில் இருந்து முட்டை வந்ததா? முட்டையில் இருந்து கோழி வந்ததா என்ற ஆண்டாண்டு காலமான விசாரணையையே ஆராய்ந்து அண்மையில் தீர்த்துள்ளனர் விஞ்ஞானிகள். ஆனால் வடக்கு கிழக்கில் படுகொலைகளை, பாலியல் வல்லுறவுகளை, வன்முறைகளை மேற்கொள்ளும் இனம் தெரியாதவர்கள் யார் என்பது விசாரணைக்கு கண்டறியப்படாமல் மர்மமாகவே உள்ளது.

இலங்கை அரசுக்கோ, அவர்கள் சார்ந்த முன்னாள் போராளி அமைப்புகளுக்கோ வி.புலிகளுக்கோ மக்கள் மீதான அனுதாபம் என்பது அவர்களது உதட்டளவிலேயே உள்ளது. தமிழர்கள் கொல்லப்படும் போது வி.புலிகளும் சிங்கள மக்கள் கொல்லப்படும் போது அரசும் அதனை தமது அரசியல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவதற்கு அப்பால் அது தொடர்பாக எந்த கரிசனையும் கொள்ளவில்லை. மாறாக இக்கொலைகளே அவர்களின் இருத்தலை உறுதி செய்கிறது என்ற அச்சம் சமாதான விரும்பிகளிடம் உள்ளது.

இலங்கை அரசுக்கும் வி.புலிகளுக்கும் அப்பால் வி.புலிகளுக்கும் அவர்களின் முன்னாள் தளபதி கருணா அணிக்கும் இடையேயான மோதல்கள் நிலைமையை படுமோசமாக்கி உள்ளது. பேச்சு வார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்ததற்கு இது முக்கிய காரணமாக அமைந்துள்ளது. கருணா அணிக்கு முக்கியத்துவம் அளிப்பது தங்கள் அரசியல், இராணுவ நலன்களைப் பாதிக்கும் என்பதால் அவர்களை இராணுவத்தின் துணைப் பிரிவாகவே விடுதலைப் புலிகள் குறிப்பிடுகின்றனர். இதனை அப்படி எளிமையாக குறிப்பிட்டுவிட முடியாது என இலங்கையில் இயங்கும் கண்காணிப்பு குழுவே (SLMM) சுட்டிக்காட்டி உள்ளது.

சகோதரப் படுகொலைகள் என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிறப்பியல் வியாதியாகவே இருந்து வந்துள்ளது. கொலைகளும் படுகொலைகளும் தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஒரு அங்கம். இரத்தக்கறை படியாத ஈழ விடுதலை இயக்கங்களே இல்லை. இயக்கங்களிடையேயும் இயக்கங்களினுள்ளும் இடம்பெற்ற படுகொலைகள் தமிழீழ விடுதலைப் பாதையை முற்றிலுமாகத் திசை திருப்பி இருந்தது. வரலாற்றுபடிப்பினைகளைக் கற்று அதன் பாதையை மாற்றி அமைக்காத போது அதே வரலாறு மீளவும் நிகழும் என்பது இயங்கியல் விதி. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் நிரூபிக்கப்பட்டு உள்ளது. நாம் விடுதலைப் போராட்டத்தில் மூன்று தசாப்தங்களை கடந்து வரவில்லை இழந்து வந்திருக்கிறோம் என்பதே உண்மை.

இலங்கை அரசைப் பொறுத்தவரை தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்தி வருகிறது. தமிழ் மக்களுக்கு எதிரான கூட்டுப் படுகொலைகளும் பாலியல் பலாத்காரங்களும் திட்டமிட்ட வன்செயல்களும் அரசு தமிழின அழிப்பை திட்டமிட்டு மேற்கொள்வதையே உறுதிப்படுத்துகிறது. இது தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க எவ்விதத்திலும் உதவாது

சம்பந்தப்பட்ட எல்லோரும் தங்கள் பாத்திரங்களை உணராதவரை எமது மக்களின் இழப்புகள் தவிர்க்க முடியாதது. தமிழ் மக்களுக்கு சமாதானம் மிகவும் எட்டாத தூரத்திலேயே இருக்கும்.



இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் மிக முக்கியமான வேறுபட்ட அரசியல் ஜனநாயக யதார்த்தங்களை சமாளிக்க முடியாமல் திண்டாடு கிறது. தென் ஆபிரிக்காவில் இடம்பெற்ற அரசியல் புரட்சி 2001ம் ஆண்டில் இடம்பெற்ற அமெரிக்கா மீதான தாக்குதல், அயர்லாந்தில் இடம்பெற்ற அரசியல் மாற்றம் போன்றவை உலக அரசியல் வரைபடத்தை முற்றாக மாற்றியமைத்துள்ளன. அரசியலில் காத்திரமான பங்கை செலுத்தக் கூடிய

**ரி கொன்ஸ்ரன்ரைன்**

# 'தியாகச் செம்மல்'
## தயா இடைக்காடர்

லண்டனில் இடம்பெற்ற இடைக்காடரின் உண்ணாவிரதப் போராட்டம் ஈழத்தமிழர்களின் அவஸ்தையை உலகுக்கு புரிய வைத்ததோ இல்லையோ ஐரோப்பிய புலி வால்களின் அரசியல் வங்குரோத்தையும் இயலாமையையும் மிகவும் சிறப்பாக அம்பலப்படுத்தி இருக்கின்றது. இடைக்காடரின் இந்த உண்ணாவிரதம் தமிழீழத்தில் வாழும் மக்களுக்கு எந்த உதவியையும் செய்யாவிடினும் நிச்சயமாக இடைக்காடரின் கொலஸ்ரோல் மட்டம் குறைய உதவியிருக்கும்.

இன்றுடன் தந்தை செல்வா இலங்கை பாராளு மன்றத்தில் உண்ணாவிரதம் இருந்து 50 வருடம் நிறைவு - தயா இடைக்காடரின் 101 மணி நேர உண்ணாவிரத போராட்டம் நிறைவு என்று இந்த பித்தலாட்டத்தையும் தந்தை செல்வாவின் துணிச்சல் மிக்க போராட்டத்தையும் சமப்படுத்தி கேளிக்கூத்தாடியது ஒரு இணையத்தளம். தனது வைத்தியரின் ஆலோசனையையும் கேளாமல் தனது உயிரை துச்சமென மதித்து மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார் என அளக்கிறது ஐபிசி. அரசியல் என்றால் சின்ன கிளைமாக்ஸ், சின்ன ஸ்டன்ட், சின்ன பொய்கள், சின்ன சுத்துமாத்துக்கள் இருப்பது சகஜம் தான். ஆனால் இது ரொம்ப ரூ மச். இடைக்காடரின் உண்ணா விரதத்தை கூட்டிக்கழித்து பார்த்தால் கந்தசஸ்டி விரதம் பிடிக்கும் எல்லோருக்கும் நாங்கள் விழா எடுத்து பின்னர் எட்மன்ரன் அம்மன் கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று வேறு விழா எடுக்க வேண்டும்.

தமிழர்கள் பலர் அழிக்கப்பட்டும் எஞ்சியோர் ஓரம்கட்டப்பட்டும் விட்டதால் இன்று தமிழ் போராட்டம் சம்மந்தப்பட்ட அரசியல் வளர்ச்சி ஈழ தமிழ் நிலைமை குறித்த அரசியல் அழுத்தங்கள் எல்லாம் வெறுமனே வற்றிப்போய் கிடக்கிறது.

இந்த வெற்று அரசியல் பாலைவனத்தில் இடைக்காடர் போன்ற சந்தர்ப்பவாத அரசியல் வாதிகள் கொடிகட்டி பறக்கின்றார்கள். இன்று வி.புலிகளை ஐரோப்பிய நாடுகள் பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்தி அந்நியப்படுத்தி உள்ளன. ஐரோப்பிய வி.புலிகளின் பிரதிநிதிகளால் என்ன செய்ய முடிந்தது. ஐரோப்பிய தமிழர்கள் கையில் கறுப்பு துணி கட்டுவதும் கறுப்பு பொட்டு வைப்பதும் உண்ணாவிரதமும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் நிலைப்பாட்டை மாற்றியமைக்கும் என்று யாராவது நம்புவார்களா?

விடுதலைப்புலிகள் மீதான தடையை பற்றி பிரித்தானிய பாராளுமன்றத்தின் இலங்கைக் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அன்டி லவ்வை சந்திக்க சென்ற ரூட்டிங் அம்மன் கோயில் சீவரத்தினம் உள்ளடங்கிய தமிழ் பிரதிநிதிகள் குழு அங்கு போய் ஜெயதேவனை பற்றி கதைத்து ஒப்பாரி வைத்துவிட்டு வந்தனர்.

இன்று இங்கிலாந்தில் வி.புலிகளின் தமிழீழ விடுதலைப் போராட்ட பிரச்சாரம் சீவரத்தினம் ஜெயதேவனின் குடும்பப் பிரச்சனையிலும் இடைக்காடர், ராஜன், வாசுதேவன் - ராம்ராஜ்

முன்னாள் கூட்டாளிகளின் பிரச்சினையிலும் மூழ்கிப் போயுள்ளது. ஈழம் கேட்டுப் போராட்டம் நடத்திய மகான்கள் எல்லோரும் இப்போது ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் குத்தகையை கேட்டு போராட்டம் நடத்துகிறார்கள் (அது free hold என்றாலும் பரவாயில்லை).

காலம் சென்ற அமரர் வைகுந்தவாசன் 1977ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையினுள் புகுந்து அங்கு பேசவந்த அன்றைய லங்கா வெளிவிவகார அமைச்சர் ACS அமீட்டை இடைநிறுத்தி அவர் தமிழில் பேசிய போது அன்றைய தமிழ் பத்திரிகைகள் எல்லாம் தமிழீழம் கிடைத்து விட்டதைப் போல் பூரிப்படைந்து பக்கம் பக்கமாக கட்டுரை எழுதினார்கள். இப்போது 30 ஆண்டுகள் கழித்து தமிழர்கள் இடைக்காடருக்கு மகுடம் சூடி தேர் இழுக்கிறார்கள். ஈழத்தமிழ் மக்களின் அரசியல் பிரச்சாரம் கடந்த 30 ஆண்டுகளில் எவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்திருக்கின்றது என்பதை இதிலிருந்து ஒப்பீட்டளவில் பார்க்கலாம்.

“நேற்றுவரை உங்களுடன் இருந்த கருணா பிரிந்து போனவுடன் கருணாவின் ஆயுதங்களை பறி அல்லது பேச்சுவார்த்தைக்கு வரமாட்டோம் என்கிறீர்கள், நாளை தமிழ்செல்வன் 2 துப்பாக்கிகளுடன் பிரிந்துபோக அதைப்பறித்து தா இல்லாவிடில் நாங்கள் உங்களுடன் பேசமாட்டோம் என்று கூறுவீர்கள்” என புலிகளின் நிலையை கிண்டலடிக்கிறார் லங்கா அமைச்சர மங்கள சமரவீர. அமைச்சரின் கூற்று ஒரு விதண்டாவாதமாக இருந்தாலும் அதில் உண்மை இருக்கின்றது. இன்று வடக்கு கிழக்கு மற்றும் எல்லைப்புற மாவட்டங்களில் என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் அதிலும் சிறார்கள் மிகக்கோரமாக வெட்டியும் சுட்டும் கொல்லப்படுகிறார்கள்.

இந்தக் கோரக் கொலைகளை சிங்கள இராணுவம் மட்டும் செய்துவிடவில்லை. கருணா கோஷ்டி, ஈபிடிபி, .... என்பதற்கு முதல் இவர்கள் எல்லாம் முதலில் தமிழீழம் கேட்டு ஆயுதம் தூக்கியவர்கள் தான். 1980ம் ஆண்டுகளில் கோழி களவெடுத்தவனை சுட்டபோதும், விறகு களவெடுத்தவனை தூக்கியபோதும் இவனுக்கு வேணும் என்று இதை ஊக்கப்படுத்தியவர்கள் மற்றும் ரெலோ இயக்கப் போராளிகள் கொலை செய்யப்பட்ட போது கொக்கோகோலா கொடுத்து மகிழ்ந்த சமூகத்தின் இயல்பான பிரதிபலிப்பு தான் இன்றும் தொடர்கிறது. இது இன்று மக்களின் கைகளையும் மீறிச் சென்றுவிட்டது. எல்லா கொடூரங்களுக்கும் மகுடம் வைத்தாற்போல் அநுராதபுரப் பகுதியில் பஸ் ஒன்றுக்கு குண்டு வைக்கப்பட்டுள்ளது. அதில் இருந்த பிள்ளை ஒன்றை உங்களுடைய பிள்ளையாக எண்ணிப் பாருங்கள். இந்த அட்டூழியத்தை யார் செய்தார்கள் என்பதில் பிரச்சனையில்லை. இதை செய்யக்கூடிய தகுதி தமிழனுக்கு இருக்கின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த ஒரு காரணத்துக்காகவே தமிழர்கள் அனைவரும் வெட்கித்தலை குனிய வேண்டும்.

ஒன்று மட்டும் நிச்சயமாக நடக்கும். ஈழத் தமிழர்கள் உலகளாவியரீதியில் அரசியல்ரீதியாக தூக்கி எறியப்பட்டுள்ளார்கள். விரக்தியின் உச்சத்தில் இவ்வாறான பாரிய உயிர்க்கொலைகள் இடம்பெறத்தான் போகின்றது. ஆகமொத்தமாக ஈழத்தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு எமது போராட்டம் பலஸ்தீனர்களின் போராட்டம் போல் ஒரு குறுகிய எல்லைக்குள்(வன்னி) முடக்கப்படும். தமிழ் மக்களின் ஆகக்கூடிய எதிர்ப்பாக சிங்கள பகுதிகளில் தமிழ் மனித வெடிகுண்டுகள் வெடிக்கும். பல சிங்களவர்கள் சாவார்கள். சில தமிழர்களும் சாவார்கள். போராட்டத்தில் இவை யெல்லாம் சகஜம்.

லங்கா சிங்கள அரசு இன்னும் சில காலங்களில் 85% நிலப்பரப்பில் தமது ஆட்சியை சுமூகமாக நடாத்தும். வேண்டுமென்றால் பலஸ்தீனம் போல் பெரும் சுவரையும் கட்டி எழுப்பும். எமது தமிழர்களின் எதிர்காலம் 15% இற்கும் குறைவான நிலப்பரப்பில் நடாத்தப்படும். எங்களுக்குஎன்றுஒரு பிரதேசம் இருக்கும். அதில் பல்லில்லாத பாம்பாக தமிழ் ஆட்சி நடக்கும். தமிழ் ஆட்சியாளர்களின் அதிகாரம் அப்பிரதேசத்துக்கு வெளியில் செல்லாக் காசு. அங்கு வளரும் தமிழ் சமுதாயம் வெளி உலகை விட 50 வருடம் பின்னோக்கி இருக்கும். இது தான் இன்று பலஸ்தீன மண்ணில் இடம்பெறுகின்றது. இது தான் ஈழ மண்ணிலும் இடம்பெறும்.

மேற்கில் வாழும் தமிழர்களுக்கு இந்த ஈழ மண் இருந்தால் காணும். அதை வைத்தே அரசியல் வண்டியோட்டி பிழைப்பு நடத்துவார்கள். ஈழ தமிழர்களின் எதிர்காலம் போராட்டப் பாதையில் சாகசங்களை விழா எடுத்து கொண்டாடுவதிலேயே கழியுமே தவிர அந்தப் பாதை என்றும் தொடரும் ஒரு முடிவில்லாத பாதையாக.

# தமிழர் விடுதலையும் கூட்டணி அரசியலும்

அன்புள்ள தேசம் ஆசிரியருக்கு,

தங்கள் ஜனவரி-மார்ச் 2006 இதழில் பக்கம் 4இல் வந்த செய்தித் தொகுப்பு ஒன்று என்னை மிகவும் விசனத்துக்குள்ளாக்கியுள்ளது. அந்தத் தொகுப்பில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் வார்த்தைகளாக வெளிவந்த சில கருத்துக்கள் என்னை இக்கடிதத்தை எழுதத் தூண்டியுள்ளன.

“எம் இளைஞர்களையும் சிறுவர் சமுதாயத்தையும் கடந்த மூன்று தசாப்தத்திற்கும் மேலாக இருட்டில் வாழவைத்த, பாசிச அரசுக்கு எதிராகப் போராடப் போகிறோம்” என்று இந்த மங்கையர் திலகமும் இவரின் துணைவர் அமிர்தலிங்கமும் 1977 பொதுத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உணர்ச்சிகரமாக உரையாற்றினர். அந்த நாளில் இந்த மங்கையர் மாதிலகம் தலைவிரி கோலமாக நின்றபடி அவரின் நீண்ட கூந்தலை விரித்து விட்டபடி “அடுத்த தைப்பொங்கலுக்கு சிங்களவனின் இரத்தத்தை என் தலையில் அரப்பாக வைத்து நீராடும்வரை என் தலை முடியைக் கட்ட மாட்டேன். இது எங்கள் தமிழ் மக்கள் மீது ஆணை” என்று கண்ணீர் மல்க பாஞ்சாலி சபத வசனங்களை அள்ளிவீசி, தமிழ் இளைஞர்கள் மத்தியில் தன்னை ஒரு விடுதலை வீராங்கனையாக நினைக்க வைத்தார்.

இவரது கணவரின் தூரநோக்குச் சிந்தனையற்ற குறுகிய அரசியல் நடத்தல் எமது இனத்தின்மீது அரைவாசி கால்வாசியாவது அக்கறை கொண்ட தமிழ்த் தலைவர்கள் பலரை அரசியலிலிருந்து ஒதுக்கவும், அவர்களை மாற்றுக் கட்சிகளில் அங்கம் வகிக்கத் தூண்டவும் காரணமாக இருந்தது. குருடனுக்கு பால் காட்டிய கதையாக விடுதலைப் போரின் ஆரம்பத்தைச் சரியாக வழிநடத்தாமல், விடுதலை வேட்கைமிகு இளைஞர்கள் தங்களின் வேதனைகள் இழப்புகளினூடாக களஅனுபவம் பெற்று, அரசியல் கற்று, இன்று நகர்த்திவரும் அரசியலைப் பேசமட்டுமல்ல நினைக்கவே தகுதியற்ற இவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று இன்னமும் தம்மை நினைத்துக்கொண்டிருப்பது பகிரங்கமாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்று.

தமிழ்த் தலைவர்களாக இருந்து தமிழ் மக்களின் சமூக அரசியல் பொருளாதார வாழ்வைப் படுகுழியில் புதைத்து சிங்களத் தலைவர்களுக்கு எமது பலத்தையும் பலவீனத்தையும் காட்டிக்கொடுத்தவர்கள். இந்திய அரசுக்கு சோரம்போய் அவர்களின் நிழலில் வாழ்வதற்காக ஒட்டுமொத்த தமிழரின் சுயநிர்ணய உரிமையையும் இந்தியாவிடம் அடகுவைத்தவர்கள் இவர்கள்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி 1948களில் இந்திய தமிழரின் சுயநிர்ணய உரிமையைப் பறிக்கவும் உதவி செய்தவர்களின் வழிவந்த இந்த தமிழ்த் தலைவர்களின் வாரிசுகள்தான் இந்த தீர்க்கதரிசனமற்ற கூட்டணித் தலைவர்கள். ஒட்டுமொத்த இலங்கைத் தமிழ் சமுதாயத்தின் அழிவுக்கும் அகிலம் பரந்த அகதி வாழ்விற்கும் அத்திவாரமிட்டவர்கள் இவர்கள். இவர்கள் தமிழ் அரசியலில் எதைச் சாதித்தனர். இவர்களுக்கு தமிழ் மக்களுக்குச் சார்பாகவோ எதிராகவோ பேசும் அரசியல் பேச்சுரிமை கிடையாது. ஜனநாயகரீதியில் இவர்கள் தமிழ் மக்களின் அழிவிற்கும் இன்றைய சோகவாழ்வுக்கும் வழிவகுத்ததன் காரணத்தால் அவ்வுரிமை மறுக்கப்பட வேண்டும்.

ஆரம்பத்தில் இலங்கையில் நேர்மையான அரசியல் நடாத்த திராணியற்று உண்மையான இனவாதத்தைத் தூண்டி எம் அரசியல் நிலையைத் தம் சுயலாபத்திற்காக சட்டியில் இருந்து தணலுக்குக் கொண்டு வந்தவர்களும் இவர்களே. தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க முடியாத பேராசையால், சுயஆட்சிக்காக நூறுவீத ஆணை வழங்கிய தமிழ் மக்களுக்கு, எந்தவித அதிகாரமும் அற்ற மாவட்ட அபிவிருத்திச் சபையைத் திணித்தவர் அண்ணன் அமிர். புதிய பாராளுமன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டால் தனது எதிர்க்கட்சித் தலைவர் பாத்திரம் புதிய பாராளுமன்றக் கல்வெட்டில் பதியப்படமாட்டாது என்ற ஜே.ஆரின் வெருட்டலுக்குப் பணிந்து, பாராளுமன்றக் கூட்டத்திற்குச் சென்றதையும் இன்றும் நாம் மறந்துவிடவில்லை.

தவிர, இறுதியாக ஒரு இனத்தின் தலைவன் எனக் கருதப்பட்ட அமிர்தலிங்கம் ஒதுக்கீட்டு பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றம் சென்றது நாம் கண்டு தலைகுனிந்த நிகழ்வாகும். அவருக்குப் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவும் அவர் எண்ணத்தில் இல்லையோ என்று எம்மை சிந்திக்க வைத்த நிலைமைகள் இவை.

“புலிகளிடம் சொல்லுங்கள் சமாதானம் வேண்டும் என்று” தூதுவிடும் இந்த அம்மையாருக்குத் தெரியாதா இத்தனை அழிவுக்கும் வழிவகுத்து ஒட்டுமொத்த இலங்கையில் சமாதானத்தை அழிக்க இவர் பங்கேற்ற கூட்டணியும் அதன் தலைவரான இவர் கணவனும் தான் முன்னோடிகள் என்று? உங்கள் அரசியல் எதிரிகளுக்கு இயற்கை மரணம் இல்லை என்று நீங்கள் கூட்டத்தில் முழங்கியதும் அதற்காக தம்பி(கள்) வெடி வைத்ததும் மறந்து விட்டதா?

துரோகங்கள் என்றும் மறக்கப்படமாட்டாது. வரலாற்றில் அவையும் வாழ்ந்துகொண்டேயிருக்கும்.

ச முருகையா
முன்னாள் உதவி விரிவுரையாளர்
புவியியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்








இடம்: ஈழபதீஸ்வரர் ஆலயத்துக்குச் செல்ல வேண்டாம் என ராஜன் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கிறார்.

வலம்: மக்கள் கூட்டம் ஆலயத்தில் நிரம்பி வழிகிறது.

ரி கொன்ஸ்ரன்ரைன்

# இதைவிடக் கூடாது .......

"இந்துக் கோயில்களை வைத்திருக்கிறவங்கள் காசையெல்லாம் சுத்துறாங்கள்.... இதைவிடக் கூடாது" என்று நண்பர் ராஜன் (பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயர் தமோதரம்பிள்ளை அனுசிறீஸ்குமார்) தமிழ் புத்தாண்டு அன்று விடிந்ததும் விடியாததுமாய் தொலைபேசியில் கதறினார். "கடைசி மட்டும் விடக்கூடாது இதற்கு என்ன செய்யலாம்?" என்று அவரிடமே கேள்வியொன்றை போட்டேன். "இன்று வெம்பிளியில் உள்ள ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் அகிம்சைப் போராட்டம் நடத்தி அங்குவரும் மக்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்போகிறோம் கட்டாயம் வாருங்கள்" என்று அன்புக்கட்டளை இட்டார். "நல்ல சமூகத்தொண்டு தான் ஏன் இந்த அகிம்சைப் போராட்டத்தை வேறு கோவில்களுக்கு முன்னாலும் வைக்கக்கூடாதா?" என்று கேட்டேன். தெளிவான பதில் கிடைக்கவில்லை.

வருசப்பிறப்பு என்றதால் ஓசி சாப்பாடும் கிடைக்கும் கொஞ்சம் பன்பலாவும் இருக்குமெண்டு ஈழபதீஸ்வரம் நோக்கி எனது யாத்திரையை ஆரம்பித்தேன். வெம்பிளி ஈலிங் றோட்டுக்குள் திரும்பியதும் அதிர்ந்தே போய்விட்டேன். இதென்ன கோதாரி ஈழபதீஸ்வரர் ஆலயத்தை அண்மித்த வீதியெல்லாம் ஒரே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. நம்மட ராஜனுக்கு இவ்வளவு செல்வாக்கு இருக்கும் என நான் கனவில் கூட நினைக்கவில்லை. சற்று கிட்டடியில் போனபோது அங்கு நின்ற அனைவரினது தலையிலும் வெள்ளை தொப்பி இருந்தது. பிறகு தான் எனக்கு விசயமே பிடிபட்டது. அந்த சனக்கூட்டம் எல்லாம் ஆலயத்துக்கு பக்கத்தில் உள்ள பள்ளி வாசலுக்கு வெள்ளித் தொழுகைக்கு வந்த இஸ்லாமியர்கள் எண்டு.

ஒருமாதிரி காரை நிறுத்திவிட்டு ஆலயத்துக்குள் போனேன். அங்கும் நூற்றுக்கணக்கான மக்கள். நான் உண்மையில் இவ்வளவு சனத்தை எதிர்பாக்கவில்லை. மக்கள் மிகவும் அடக்கமாகவும் ஒழுங்காகவும் ஆலயத்துக்குட் போவதும் வருவதுமாக இருந்தார்கள். வீதியில் நின்றபடி ராஜனும் அவரது நண்பர் மதியும் இன்னொரு நண்பரும் நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜனுடன் நின்ற நண்பர் மதி தான் லண்டனுக்கு வந்த நாளில் இருந்து இந்த ஆலயத்துக்கு வருவதாகவும் தன்னை பொறுத்தவரை தனக்கு வேறு ஆலயங்களில் என்ன நடக்கின்றது என்பதில் அக்கறை இல்லையெனவும் ஈழபதீஸ்வரர் ஆலயம் மக்களுக்கு சொந்தமாக்கப்படல் வேண்டும் என்று சரியாக feel பண்ணினார். ராஜனின் மற்றைய நண்பர் "தமிழ் ஒழுங்காக கதைக்கத் தெரியாத கொன்னை ராம்ராஜ் உடன் சேர்ந்து இந்தக் கள்ளன் ஜெயதேவனும் காசடிக்கிறான்" என வசை மாரி பொழிந்தார். ரிபிசி ராம்ராஜ் ஒரு கள்ளன் என அங்கு நோட்டீஸ் கொடுத்த மூவராலும் வசைபாடப்பட்டது. ஜெயதேவன் மீதும் தாராளமாக வஞ்சம் பாராமல் வசைபாடப்பட்டது. ஜெயதேவனும் பதிலுக்கு "அரசாங்கத்தின் பிச்சைக்காசில் இருப்பவர்கள்" என ராஜன் குழுவினரை பார்த்து கூறினார். "அரசாங்கத்தின் பிச்சைக்காசில் இருந்தாலும் பரவாயில்லை, நாங்கள் கோயில் காசை களவெடுக்கவில்லை"

என்றார் ராஜன். கோயில் ஓசி சாப்பாட்டுடன் இந்த சம்பாசணையும் நன்றாக களைகட்டியது.

நோட்டீஸ் கொடுத்த ராஜனும் இரு நண்பர்களும் மிகவும் டென்சனில் இருந்தது போல் தெரிந்தது. இதற்கு மாறாக ஜெயதேவன், தீபன், சௌந்தரராஜன் ஆகியோர் மிகவும் ரிலாக்ஸ் ஆக கோயிலுக்கு வந்தவர்களுடன் கைகுலுக்கி கதைத்து கொண்டிருந்தார்கள். தமிழ்ப் படங்களில் வரும் வில்லனைப்போல் தொழிற்கட்சி நகரசபை உறுப்பினர் இடைக்காடர் குட்டி போட்ட பூனை மாதிரி வீதிக்கு எதிர்ப்புறத்தில் மேலேயும் கீழேயும் நடந்த வண்ணம் இருந்தார். “இவன் இடைக்காடனும் சீவரத்தினமும் தான் இந்த மூண்டு பேரையும் இங்கு அனுப்பி இருக்கிறாங்கள்” என்று ஜெயதேவனால் கூறப்பட்டது.

இந்த வெகுஜன மக்கள் போராட்டத்துக்கு ஸ்பொன்சர் செய்த வாசுதேவனை (கண்ணன்) அந்தப்பக்கம் காணவில்லை. வாசுதான் இந்தப் போராட்டத்தின் ஒப்பற்ற தலைவன் என்று கேள்வி. “வாசு எங்கே” என்று வினவினேன் ராஜனை. “அவர் wife ஐ இறக்க ஹரோக்கு போட்டார்” என்றார் ராஜன். ‘மக்கள் நலனும் குடும்பநலனும் எவ்வளவு சிறப்பாக கையாளப்படுகிறது........ சீ.........’ எனது இயலாமையை மனதுக்குள் திட்டிக்கொண்டேன்.

சரி எனது வந்த வியடம் சுகமாக திருப்தியாக முடிவுற (சாப்பாடு) காரில் ஏறி வீட்டுக்கு புறப்பட்டேன். இதயத்தில் ஏதோ குத்துவதைப் போல உணர்வு, அசௌகரியமாக இருந்தது. எனக்கு வியர்த்துக் கொண்டு வந்தது. அப்படியொன்றும் சீரியஸ் இல்லை, ராஜன் தந்த நோட்டீசை மடித்து சட்டைப்பைக்குள் வைத்தேன். அதுதான் குத்தியிருக்கிறது. வெம்பிளி traffic இல் நிற்கும் போது நோட்டீசை எடுத்து மேலோட்டமாக கண்ணோட்டம் விட்டேன். ‘சிவன் சொத்து குலநாசம், அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும், misapproriation of gods funds will destroy generations,.....’ எங்கேயோ வாசித்த வசனம் போல் தென்படுகிறதே எங்காக இருக்கும்....... ஐயோ சிவயோகத்தின் website..... சிவத்தொண்டு செய்பவன் ஒரு நாளும் சாவதில்லை..... என்ற நாமத்தை கூறியபடி வீடு நோக்கி விரைந்தேன். ஸ்பொன்சர் பலமாக இருக்கும் என்று எண்ணவும் வீடு வந்து சேரவும் சரியாக இருந்தது.

அப்போது மீண்டும் ஒரு தொலைபேசி அழைப்பு. லைனில் ராஜன். “இந்தப் போராட்டம் தொடரும்” என்று சொல்லி இன்னும் இரு திகதிகளைத் தந்து அதற்கும் அழைப்பு விடுத்தார். ராம்ராஜ், ஜெயதேவன், ராஜன், கண்ணன், தயா இடைக்காடர் எல்லோருமே ரிபிசியில் ஊறிய மட்டைகள்தானே.அரசியலில் மட்டுமல்ல ரேடியோவிலயும் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிரிகளும் இல்லை என எனக்குள் முணுமுணுத்தபடி வீட்டிற்குள் நுழைந்தேன். “வேலை வெல்லாட்டி இல்லையா .....” மனைவியின் மங்களம் என்னை வரவேற்றது. ☑

## நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ:

### தந்தை தனயனுக்கு....

நம்மட முத்துமாரி அம்மன் ஐயா தன்ர கலைகளை இப்ப மகனுக்கு தீவிரமாக கற்பித்து வருகிறார். மொட்ட கடிதம் போடுறது, மொட்ட நோட்டீஸ் அடிக்கிறது போன்ற விசயங்களில மகனுக்கு இப்ப full training. ஈழபதீஸ்வரர் கோவிலுக்கு முன்னால ஐயாவின் மகன் செய்த மாபெரும் மக்கள் போராட்டத்துக்கு ஒருத்தனும் வரேல்ல. ஐயா சுனாமி என்று சேர்த்த காசெல்லாம் இப்பிடி அநியாயமாக செலவழியுது. தன்ர மற்ற கலைகளையும் மகனுக்கு சொல்லிக் கொடுக்காம விட்டா அதுவே காணும்.

### அகவை business


இந்த அகவை business லண்டனில் மிகவும் சூடு பிடித்திருக்கிறது. பழசுகளுக்கு பிறந்தநாள் கொண்டாடுற பழக்கத்தை லண்டனில் அறிமுகப்படுத்திய சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு உலக வாழ் தமிழர்கள் என்றும் கடமைப்பட்டிருக்கிறார்கள். முதலில் நமது தூயமனிதர் சிதம்பரப்பிள்ளை ஐயாவுக்கு 60 வயதென்று அன்புச்சுடரொலி நாகநாத குருக்கள் விழா எடுக்க இப்ப நாகநாத குருக்களுக்கு 50 வயதென்று சிதம்பரப்பிள்ளை ஐயா விழா எடுக்கிறார். இனி இவர் 70 ஆக அவர் விழா எடுக்க அவர் 60 ஆக இவர் விழா எடுப்பார். பிறந்தநாளுக்கு இப்ப மகுடம் கூட சூடுகிறார்கள். அடுத்தமுறை Eastham high streetல் தேர் இழுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### terms and conditions

லண்டனில் உள்ளூராட்சி தேர்தலில் நிற்கும் தமிழர்களுக்கு publicity செய்ய விரும்புகிறோம், உங்கள் படங்களை (தொடர்ச்சி 17ம் பக்)

# யாழ் நூலகத்தில் நின்று ஒரு ஹொலிடே போட்டோ

**என் செல்வராஜா**




மீண்டும் மற்றொரு ஜுன் 01 சந்தடியற்று எம்மைக் கடந்து போய்விட்டது. ஆம் அது இம்முறை இருபத்தைந்தாவது தடவையாகக் கடந்து சென்றுள்ளது. யாழ்ப்பாணப் பொது நூலகம் சிறீலங்கா அரசின் கைக்கூலிகளினால் எரிக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்து சென்று விட்டன. இப்போது யாழ்ப்பாணப் பொது நூலகமும் லண்டன் பிக்பென் மணிக்கூண்டுக் கோபுரம் போல, பாரிஸ் ஐஃபெல் கோபுரம் போல, கனடாவின் சீஎன் கோபுரம் போல யாழ்ப்பாணத்தின் குறியீடாகவே எங்களுக்குப் பழக்கமாகிவிட்டது.

அரசாங்கத்தினால் அழிவின் அடையாளமே தெரியாதபடி மறுசீரமைத்துத் தரப்பட்ட அந்தப் புதிய கட்டிடத்தின் முன்நின்று குடும்பம் குடும்பாக பூரிப்புடனும் பெருமிதத்துடனும் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் புலம்பெயர்ந் தோர் கூட்டமும், அவர்களுக்குத் தீனிவழங்கும் வகையில் தபால் அட்டைகளாக (Picture Postcard) உயர்தரத்தில் நூலகக்கட்டிடத்தின் புகைப்படத்தை அச்சிட்டு விற்று வியாபாரம் செய்யும் வர்த்தகர் கூட்டமும், யாழ் நூலகத்தை காட்சிப் பொருளாக்கியே விட்டார்கள். நூல் வெளியீட்டாளர்களும் தத்தமது படைப்புக்களில் சம்பந்தமேயில்லாமல் யாழ் நூலகத்தை அட்டைப் படங்களாக்கித் தள்ளுகிறார்கள். இணையத்தளங்களும் தாமும் எதற்கும் சளைத்தவர்களல்ல என்றரீதியில் தமது இணையத்தள வரவேற்புப் பக்கங்களில் பனைமரத்திற்கு அடுத்தபடியாக யாழ்ப்பாண நூலகத்தை பதிந்து தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில் எனக்குக் கிடைத்ததொரு கடிதத் தலைப்பிலும் யாழ்ப்பாண நூலகம்!

அதென்ன யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் எமது மக்களுக்கு இப்படியொரு தனிப்பட்ட பற்று? ஜேர்மனியில் ஒருவரிடம் கேட்டுத் தொலைத்தேன். அவர் சொன்னார் யாழ்ப்பாணப் பொது நூலகம் எமது மண்ணின் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றாம். ஈழத்தவரின் அறிவுத் தேட்டத்தின் விளைநிலமாம். அவரது வீட்டிலும் நூலகப் பின்னணியில் குடும்பப் படம்.

அது சரி, எம்மவரின் மனதில் ஆழமாக இடம் பிடித்துக்கொண்ட இந்த அறிவின் ஊற்று இன்று மாநகரசபை நிர்வாகத்திள்குள் முடங்கி அடிப்படை மின்சார, தொலைபேசிப் பாவனைக்கான செலவினத்தைக்கூட ஈடுசெய்வதற்குத் திண்டாடுவதும், போதிய பயிற்சி பெற்ற நூலக நிர்வாகிகள் இன்றித் தன் நாளாந்த சேவைகளையும் விரிவாக்க சேவைகளையும் முன்னெடுத்துச் செல்லவியலாத நிலையில் அல்லாடுவதும் எத்தனை பேரின் உள்ளங்களில் உறைத்திருக்கின்றன?

புலம்பெயர்ந்த தேசங்களில் செழித்தோங்கும் ஆலய நிர்வாகங்களிடம் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் அபிவிருத்திக்காக முன்னாள் யாழ் மாநகர ஆணையாளர் வே.இராமலிங்கம் அவர்களின் வேண்டுகோளின்பேரில் 2003இல் நிதியுதவிக்காக நெருங்கினோம். பயனில்லை. யாழ்ப்பாணப் பாடசாலைகளின் பழையமணவர் சங்கங்களை அணுகினோம். யாழ்ப்பாணப் பொது நூலகத்தைச் சுற்றியிருந்து அதன் பயனை அன்று அனுபவித்துவிட்டு வந்தவர்கள் அவர்கள். இன்றும் அதை அனுபவித்துவரும் அதே பாடசாலைகளின் மாணவரகளின் நன்மைக்காகவேனும் யாழ்ப்பாண பொது நூலகத்துக்குத் தமது நிதிச்சேகரிப்பின் ஒரு சிறு பங்கையாவது வழங்கும்படி பாடசாலை அமைப்புகளைத் தம் கடைக்கண் பார்வையை யாழ் நூலகத்தின்பால் காட்டும்படி கேட்டோம். பலன் தான் இல்லை.

சரி, அமைப்புக்கள் தான் கைவிட்டுவிட்டார்கள் என்று தனிப்பட்டவர்களின் ஆதரவை எதிர் பார்த்தோம். பெரும்பாலானவர்கள் தமது நிலவறைகளில் தூசுபிடித்துப்போயுள்ள பழைய நூல்களை ஆர்வத்துடன் அங்கு அனுப்பிவைத்துத்





தத்தமது வீடுகளை சுத்திகரிப்புச் செய்வதற்குத் தான் விரும்பினார்களேயொழிய அந்த நூலகத்துடன் தொடர்புகொண்டு அவர்களது நியாயமான தேவையறிந்து அதற்கேற்ப காத்திரமான நிதிப்பங்களிப்பினை நல்க எவருமே தயாராகவில்லை. எல்லோருக்கும் வெவ்வேறு நோக்கங்கள். பாவம் பொது நூலகம். மீண்டும் தனிமரமாகிவிட்டது.

இப்போது கூட ஒன்றும் குடிமுழுகிவிடவில்லை. யாழ்ப்பாணம் செல்பவர்கள் ஒரு பொழுதை ஒதுக்கி அந்த நூலக நிர்வாகிகளைச் சந்தித்து அவர்களின் சிறு தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொறுப்பையாவது ஏற்கலாம். புத்தகம் மட்டும்தான் அவர்களின் தேவை அல்ல. இதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். பாரிய நூலகக் கட்டிடத்தை முழுமையாக அரசாங்கம் புனரமைத்துக் கொடுத்துள்ளது. அதன் அன்றாட நிர்வாகச் செலவுகளைச் சமாளிக்கும் பொறுப்பு மாநகரசபைக்குரியது. பொதுவாகவே பொதுநூலகம் வருமானம் ஈட்டாத துறையென்று அதை வெள்ளை யானையாகக் கருதி ஒதுக்கும் சுபாவம் நிர்வாகத்தவருடையது.

இன்றைய நிலையில், நூலகத்தின் அடிப்படை நிர்வாகச்செலவு ஈடுசெய்யப்பட வேணடும். நடமாடும் நூலகசேவைக்கென யுனெஸ்கோ வழங்கியபாரியபஸ்வண்டியொன்று நூலகவாசலே கதியென்று கிடக்கின்றது. அதனை இயங்கவைத்து கிராமங்களை நூல்கள் சென்றடையும் நடமாடும் நூலகசேவைக்கு உயிரூட்டலாம். நூலகஊழியர்கள் மேலதிக நூலகப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய உதவிகளை வழங்கலாம். யாழ்ப்பாண மாணவர்களுக்கு வேண்டிய நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி வசதியை ஸ்பொன்சர் அடிப்படையில் யாழ். நூலகத்திற்கு வழங்கலாம். யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கான பட்டியலை இணையத்தளத்தினூடாகக் கொண்டுவர அவர்களுக்கு உதவலாம். அவர்களிடம் தொழில்நுட்ப வசதி உள்ளது. அவர்களுக்குத் தேவை நிதியுதவி. யாழ்ப்பாண நூலக வளவுக்குள் பெரியதொரு நூலகச் சிற்றண்டிச்சாலையொன்று கட்டப்பட்டு உள்ளது. தற்பொது பாவனையற்று இருக்கும் இச்சிற்றுண்டிச் சாலையை இயங்கவைக்கலாம். அயலிலுள்ள கல்வி நிறுவனங்களின் ஊழியர்களும் மாணவர்களும் கூட அதைப் பயன்படுத்தத்தக்கதாக அதன் சேவையை விரிவாக்கி அதன்மூலம் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு மேலதிக வருவாய்பெற வழியேற்படுத்தலாம். இப்படி எத்தனையோ வழிமுறைகள் உள்ளன.

வாசலில் நின்று ஞாபகப் புகைப்படங்களை எடுப்பதில் தவறில்லை. ஆனால் அதைமட்டுமே செய்வதை புலம்பெயர்ந்து வாழும் நாங்கள் முதலில் நிறுத்தி, உணர்வுள்ள ஒருசிலர் முதலில் யாழ்ப்பாண நூலகத்துக்குள் முன் அனுமதியுடன் நுழைந்து அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து அதற்கு தனிப்பட்டவகையிலோ, தான் சார்ந்த அமைப்பின் உதவியுடனோ எப்படி உதவலாம் என்ற வழிவகைகளை ஆராய வேண்டும். மிகவும் சிக்கலற்றதும் இடைத்தரகர் அற்றதுமான நேரடி நடைமுறை இதுவாகும்.

அதை விடுத்து கட்டிடக் கனவுகளுடனேயே எமது எஞ்சிய சிந்தனைகளை உறைநிலையில் வைத்திருப்பதென்று நாங்கள் முடிவுசெய்தால், யாழ்ப்பாண நூலக வளர்ச்சியின் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே இருக்கும். யாழ் நூலகம் எரிக்கப்பட்டது வரலாறு. தனது வரலாற்றுத் தவறை திருத்திக் கொள்ள அரசு புதிய நூலகத்தை கட்டிக் கொடுத்துள்ளது. எமது அடுத்த கட்டம் என்ன ? ஆயிரத்து தொளாயிரத்து எண் .......... என்று வரலாறு பேசுவதா அல்லது அடுத்த கட்டம் நோக்கி நகர்வதா?

Creativity

# உருவாக்குமை



ர சு பொதுமகன்

மனிதனை ஏதேதோ விதங்களில் கவர்ந்திடும் ஆக்கங்கள் பல கோடி கோடிகளாகும். ஆனால் இவ்வாக்கங்களை படைத்தவர்கள் எப்படித்தான் இவ்வற்றினை செய்ய முனைவதற்கான நோக்குகள், அவற்றிக்கான சிந்தனை ஓட்டங்கள் எவ்வாறு உதித்தன? என்ற கேள்விகளுக்கு, இறைவன் அருளையும், புதைந்த உணர்வையும் (subconcious) காரணிகளாக்குவது எந்த சமுதாயங்களினதும் வழக்கு. மூளை என்பதையே முற்றாக புரிந்து கொள்ளாத வேளையிலே, மனம், உருவாக்குமை என்பவைபற்றி எவ்வளவு தூரம் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்திடலாம் என நாம் விசாரித்துக்கொள்வது நியாயமானதே. அண்மைக் காலங்களில், மூளை, மனம், உருவாக்குமை என்ற பல்துறைகளில் விஞ்ஞானிகள் மட்டுமின்றி, தத்துவார்த்தகர்கள், மனோவியல் நிபுணர்கள் யாவருமே மிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார்கள். இவற்றின் கணிப்புகளை வாசகர்களுடன் பகிர்ந்திடுவதே இக் கட்டுரையின் நோக்கு.

மனிதன் என்ற மிருகத்தின் சரித்திர அத்தியாயத்தின் தொடக்கக் குறிப்புகள் கூர்ப்பினால் இயையப்பட்டதாகின் அந்த மாற்றத்தின் இயங்கியலுக்கு சிந்தனை என்பது முனைப்பாகும். அப்படியாகப் பரிணமித்த மனிதனுள்ளே, என்றென்றும் வளர்வுகண்டு கொண்டே அவனது கிரீடத்தினுள், வாழும் மூளை என்ற பொருள் சிந்தனையை சிந்திக்க வைப்பதற்கான ஊற்றுத் தரும் வளமாகும்.


மனிதனது மூளை வெறும் உடலை இயக்கும் கருவியாகமட்டுமின்றிசிந்தனையின்ஊற்றாகவும், உணர்வின் இருப்பிடமாகவும் இருக்கிறது.

சிந்தனையால், சிந்தனையின் குணாதிசையத்தின் மாற்றத்தால் பரிணமித்த மனிதனின், மனத்தையும் (mind), உணர்வையும் (concisiouness) கொண்டது மூளை என்ற பொருளன்றி வேறல்ல. அதுமட்டுமல்லாது இவற்றிடையே உள்ள செய்யுமையாகவும் (functional) மூளையே உள்ளது.

இவ்வகையில் மனினது மூளையின் இயலுமைகளில் ஒன்றாக பிரிதுபடுத்திப் பார்க்கக் கூடிய கருமமுமான "உருவாக்குமை" எங்ஙனம் இடம் பெறுகிறது? எவ்வகையில் ஒருவன் மற்றவனிலும் அதிகமான அல்லது விதியாசமான உருவாக்குமையை பெற்றுள்ளான்? என்ற கேள்விகள்மனிதனதுதேடுதலில்முக்கியமானவை.

உருவாக்குமை என்ற விடயம் பிறிதுபடுத்தப் பட்டு, பிரத்தியேகமான விஞ்ஞான விசாரணைகளுக்கு உட்படுத்தப்படும் நிலமை 1960 ஆண்டுகளின் பிற்பாடுகளிலேயே உருவாகியது. 1970 ஆண்டுகளின் முற்பகுதிகளில் கூட உருவாக்குமை என்பது மனிதனின் புத்திக்கூர்மை (intellegence) என்பதுடனேயே தொடர்பு கொண்டது என்ற நிலைப்பாடு இருந்தது. ஆரம்ப காலங்களில் புத்தி ஈவு (IQ) சோதனைகளால் பெற்ற தகவல்கள் பிரயோகமானவையாக இருக்கவில்லை.

அதன் பிற்பாடுகளில் உருவாக்குமையை சோதிக்கும்வழிமுறைகளின்தந்தை என அழைக்கப் படும் Paul Torrance என்பவரால் பல புத்தி ஈவு, உருவாக்குமை இயல்பு குறித்த சோதனைகள் இயற்றப்பட்டன. அவற்றின் பின்னரே, புத்திக் கூர்மைக்கும் உருவாக்குமைக்கும் இடையிலான, அன்றுவரை ஏற்றுக் கொள்ளப்பட்ட, தொடர்புகள் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டவை என்பது தெரிய வந்தது. உண்மையில் புத்தி ஈவு (IQ) சோதனையால் நிரூபிக்கப்படும் புத்திக் கூர்மையானது உருவாக்குமையை உந்தும்




காரணியாக இருக்கவில்லை. உருவாக்குமை செய்பவர்கள் புத்திசாலிகள்தான் ஆனால் புத்திக் கூர்மையுடன் இருப்பது உருவாக்குமையை உத்தரவாதம் செய்யும் என்பதற்கு இல்லை.

உருவாக்குமையில் ஈடுபடுவோரது மூளையினுள்ளே உண்மையாக இடம்பெறும் நிகழ்வுகள் என்ன என்பது சோதனைகளுக்கு எட்டாதது என்பதனால், உருவாக்குமை பற்றிய ஆய்வுகள் தொடக்க காலங்களில் மனிதனது பிரத்தியேக குணாம்தியங்களை (Personality) உன்னிப்பதிலேயே தங்கியிருக்க வேண்டியதாகிற்று. இத்துறை நிபுணரான கலிபோர்ணியா அரச பல்கலைக் கழகத்தை சேர்ந்த Mark Runco கூறுகிறார்:

"உருவாக்குமையில் ஈடுபடுபவர்கள் பொதுவில் மேன்மித - அழகின்பால் (aesthetic beauties) கவரப் பட்டவர்களாகவும், பல்வேறு துறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்பவர்களாகவும் உள்ளார்கள். ஆதலினால் அவர்கள் பலதுறைப்பட்ட அறிவுகளிலும் தமது தேவைகளின் போது தங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளதுடன், மேன்மித ரசனை என்பதும் கூடவே உள்ளமையால் தமது தேவைகளுக்கு ஏற்ப பல விடயங்களை சேர்த்து தமது தேடல்களின் பிரகாரம் மீள் ஒழுங்கு செய்துகொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். இவர்கள் ஏதாவது மிகவும் பிரச்சனையான சர்ச்சைக்குரிய விடயங்களால் தம்மை அறியாதே கவரப்படுகிறார்கள். சர்ச்சைகளை பொதுவில் இலகுவில் கையாளும் இயல்பு கொண்ட இவர்கள் மிகவும் சுய உந்துதல் (self motivation) கொண்டவர்களாகவும் காணப்படுவதுடன், சிலவேளைகளில், ஒரு விடயத்திலேயே கவனம் செலுத்தும் பைத்தியம் கொண்டவர்களாகவும் காணப்பட்டால் அது புதுமையானதாக இருக்காது.

இவர்களுக்கு எதிர்மாறாக, உருவாக்கும் இயல்பு குறைந்தவர்களோ பொறமை அற்றவர்களாகவும், பிரச்சனையான விடயங்களில் (complex) நாட்டம் இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர். அதாவது, சுருங்கக்கூறின், உருவாக்கும் தன்மை பொறுமைசாலிகளாக இருந்தால்போல் வந்து சேரும் என்பதற்கில்லை. தாம் கொண்ட பொறுமையிலும் ரசனை காணக் கூடியவர்களுக்கே கூடிய அளவில் அது வந்தடைகிறது என்பதே உண்மையாகும். "

ஆனால், மனித குணாம்திசயங்களுக்கும் உருவாக்குமைக்கும் இடையில் ஏதோ தொடர்பினைக் கண்ட மனோவியல் நிபுணர்கள் ஒரு சில அவதானிப்புகளுடனேயே தமது முடிவுகளுக்கு வந்துவிட்டனர் என்பது இன்று புரிகிறது. ஏனெனில் இவர்களது பார்வையில், உருவாக்குமையில் பெயர் பெற்றவர்கள் பொதுவில், கூடிய அளவில், மனஉளைவு (mood swings) கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இதனால் உருவாக்குமை எனும் இயல்புக்கு இந்த மனஉளைவு சாவியாக இருக்கலாம் என்கிறார் Kay Redfield Jamison, John Hopkins University, Maryland. அதாவது, மனஉளைச்சல் எனும் போது ஒரு சந்தோசமான மன நிலையிலிருந்து ஒரு கவலையான மனநிலைக்கு, அல்லது எதிர் மாறாக, வெளிக் காரணிகள் எதுவுமே இல்லை என்ற நிலைப்பாட்டிலும் கூட, சடுதியாக மனநிலை மாறுவது போன்றவற்றையே இங்கு குறிப்பிடுகின்றோம். இவரது கணிப்பின்படி, கறுப்பான (negetive) மனநிலையே உருவாக்குமைக்கு அவசியமான காரணி என்று கூறுவதற்கில்லை. உண்மையில், கறுப்பு வெள்ளை (positive)எனும் மனோநிலைகளுக்கு இடையிலான மாறிமாறி நடைபெறும் மனநிலை மாற்றமே உதவியாக அமைகிறது.

உருவாக்குமையில் ஈடுபடுபவர்களிடையே குறிப்பிடக்கூடிய தொகையில் பாரிய மன நோய்களும் பொதுவானதாக உள்ளது என்பது உண்மைதான். இத்தொடர்புபற்றி ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தை சார்ந்த மனோவியல் நிபுணர், Gordon Claridge கருத்து கூறுகையில், "குரல்கள் கேட்பது போன்ற பிரமை, கற்பனையையே நிஜமானதென ஏற்கும் மனப்பாங்கு, ஒழுங்கு

முறையில்லா சிந்தனைப்போக்கு போன்ற குணம்திசயங்கள் ஸ்கிட்ரபேனியா (schizophrenia) என்ற மனநோயால், இவர்கள் விகிதாசாரத்தில் மற்றவர்களிலும் பார்க்க, அதிக அளவில் பாதிக்கப் படுகிறார்கள்.

தடையற்ற சிந்தனை (open), பக்கமுறைச் சிந்தனை (lateral), பல்துறை சிந்தனை (divergent) என்பவற்றில் திறமைசாலிகளாக இருப்பதனால் இவர்களது புத்திசாலித் தன்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவேதான், இவர்களது உருவாக்குமைக்கு வடிகான்களாய் அமைந்து உதவுகின்றன. இருந்தும், இவர்களிடையே மன வருத்தங்கள், கவலைகள் தோய்ந்த மனோபாவம் இருப்பின் இவர்களை பாதிப்பான நிலமைகளுக்கு உள்ளாக்குகின்றன'' என்கிறார். அதாவது, மனச் சஞ்சலங்களுடன் இருப்பவர்கள், திறந்த மனத்துடன் அல்லது பல்துறை, பக்கமுறை சிந்தனைகளுள் தம்மை உட்படுத்தும்போது மனநோய்களுள் ஆழ்ந்து போவது பொதுவில் கவனித்துக் கொள்ளும் விடயமாவவே உள்ளது.

டொறன்ரோ பல்கலைக்கழக மனநோய் ஆய்வாளர், Jordan Peterson உருவாக்குமைக்கும் மனநோய்களுக்கும் இடையான உறவு 'ஒன்று இல்லாது மற்றது இல்லை' என்பது போன்றதானது அல்ல என்கிறார். உருவாக்குமையில் சிறப் பானவர்களில் பலர் மனநோய்களுக்கு உள்ளா குவதனால், மனநோய் கொண்டவர்களே கூடிய அளவில் உருவாக்கம் தரும் இயல்புகளையும் கொண்டிருப்பார்கள் என்று முடிவு சொல்வது தவறு என்பதே இவரது கணிப்பு. மாறாக, உருவாக்குமையில் இயல்பாக ஈடுபடுவோர் கூடியளவில் மனநோய் கொள்வதற்கான விளக் கத்தை தான் தரமுடியும் என்கிறார் இவர்.

ஒவ்வொரு கணமும், பெரும் தொகையான தகவல்கள் எமது உணரும் சாதனங்களூடாக (sensors), எமது மூளையை வந்தடைய முயன்ற வண்ணம் உள்ளன. அனுகுபவை யாவற்றையுமே எமது மூளை ஏற்றுக்கொள்ளுமேயாகின், அது மலையருகில் நின்றவன் மேல் ஏற்பட்ட மண்சரிவு போன்றதாய், மூளையோ நலிந்து புதைந்து போய்விடும். எமது மூளையினை காப்பாற்றிட எம் ஒவ்வொருவருக்கும் என்றே, எம் கூடவே உருவான உள்ளணை (latent inhibition) மூளையிடம் உள்ளது. இவையே 'தேவையானவை' என்பவற்றை மட்டும் உள்ளே அநுமதித்து மற்றவையை தடுத்தோ அல்லது கவனம் செலுத்தாதோ அப்புறப்படுத்தி, தகவல் சுமையில் மூளை தாண்டு போய்விடாது காப்பாற்றுகிறது. உருவாக்கம் செய்ய விளைபவர்கள் பொதுவில் உள்நோக்கி வரும் தகவல்களின் தூண்டல்களுக்கு இசைவானவர்களாக உள்ளனர். எனவேதான் இவர்களிடம் கூடிய அளவில் பல வகையான அறிவு இருக்க முடிகிறது. அத்துடன், இவர்கள் புத்திமான்களாகவும் இருப்பதனால், உருவாக்குமையை இயல்புடன் செய்கிறார்கள். ஆனால் மூளையின் உள்ளணை மிகவும் சிறியதாகின், அவசியமில்லா நுகர்வுகளால், அதாவது தேடலின் நிமிர்தத்துடன் இணைவில்லாத தகவல்களால் குறுக்குமாறான, குழப்பமான சிந்தனைப் போக்குகளுள் தம்மை உட்படுத்திக் கொள்கிறார்கள். அதனாலேதான், இவர்கள் மனநோயை பெற்றுக் கொள்ளும் தன்மையானவர்களாக உள்ளனர். எனவே உருவாக்குமையில்சிறந்தவர்கள் மனநோயாளிகள் ஆகுவதற்கு கூடிய வாய்ப்பு உண்டு என்பதிலும் பார்க்க, மூளையின் உள்ளணையின் தடுப்பு குறைந்தவர்களே மனநோய்க்கான பிரதிகளாக உள்ளனர் என்று கூறுவது பொருத்தமானது என்கிறார் ஜோர்டன் பீற்றர்சன்.

இதுவரையில், மேல்கண்ட பந்திகளூடாக நாம் அறிந்தவைதான் என்ன?

1. உருவாக்குமை என்பது மூளையின் ஒரு பிரத்தியேகமான செயல் என கணித்துக் கொண்டு ஆய்வுகள் செய்வது சரியானதே.

2. உருவாக்குமைக்கும் தனிமனித குணா தியங்களுக்கும் இடையே இருப்பதாகக் கருதிய உறவு தற்செயலானது.

3. உருவாக்குமை சடுதியான, பாரிய மனநிலை மாற்றங்கள் ஏற்படும்போது கூடிய சாத்தியம் பெறுகின்றன.

4. உருவாக்குமைக்கும் மனநோய்களுக்கும் இடையேயான தொடர்பு பிழையான விளக்கங்க ளால் அல்லது அறிவு போதாமையால் ஏற்படுத்தப் பட்டது.

5. ஒவ்வொரு மனிதனும் கொண்ட மூளை யின் உள்ளணையும், புத்திசாலித்தனமும் அவனது உருவாக்கும் தன்மையை நிர்ணயம் செய்கின்றன.

6. இந்த உள்ளணைக்கும் மனிதனது செய்யுமைகளுக்கும் இடையே உள்ள உறவுகளே

மனநோயுடனான தொடர்புகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

சரி, உருவாக்குமை என்ற செயல் பற்றிய ஆய்வுகள் என்ன சொல்கின்றன?

இவ்வழியில், நேரடியாக மூளையின் செயற்பாட்டினை முதலில் ஆய்வு செய்தவர் Collin Martindale (படம்) என்ற மேய்யின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனோவியல் நிபுணராவார். இவர் 1978 ஆண்டுப் பகுதிகளிலே மின்சார உந்துகைப் படிவம் (electroence phalogram) என்ற முறையை கையாண்டு மனிதர்கள் உருவாக்குமையில் ஈடுபடும் போது மூளையுள் எவ்விதமான நடத்தைகள் இடம் பெறுகின்றன என்று விசாரணை செய்தார். தலையில் பல இடங்களில் மின்சாரப் பாய்சலை (electrical pulses) குறிப்பீடு செய்யும் மின்முனைகளை (electrodes) பொருத்தி, பலரை கதைகள் இயற்றுமாறு பணித்தபின் மூளையுள்ளே இடம் பெறும் மூளையின் மின்சார அலைகளை (brain waves) ஆவணம் செய்தார். இதன் போது, உருவாக்குமை என்பது இரு கட்டங்களில் இடம் பெறும் ஒரு விடயம் என்பது ஓரளவு புரிந்தது. இவற்றினை, உந்துளிராக்கம் (inspiration), பரப்பாக்கம் (elaboration) என்று குறிப்பிடலாம். இவை இரண்டும் மூளையுள் இரு வேறுபட்ட மனோநிலைகளை பிரதிபலித்தன என்றால் மிகையாகாது. உந்துளிராக்கத்தின் போது, அதாவது தனது கதைக்கான முனைப்புகளை தேர்ந்து கொண்ட போது, அங்கிருந்தவரது மூளையோ மிகவும் அமைதியானதாகக் காணப்பட்டது. இந்நிலை ஒருவன் நித்திரை செய்யும்போதோ அல்லது ஓய்வு கொள்ளும்போதோ அல்லது கனவு காணும்போதோ அவனது மூளை கொள்ளும் நிலைக்கு ஒப்பானதாகும். இக் கருமத்தின் போது அல்ப்பா அலையே (alpha wave) பெருமளவிலானதாக இருந்தது. இது உணர்வு கொண்ட மனோநிலை (conscious mind) உறங்குவது போன்ற, மனிதனது ஆறுதலான பாங்கிலான நிலையாக இருந்ததுடன், அவனது சிந்தனை பிறப்பிக்கும் மூளையின் பாகமும் (cortex) உறக்கமாக அமைதியாகவே உள்ளது என்பதையும், சொல்லாமல் சொல்லியது. மூளையின் நடத்தையோ தன்னுள்ளான பல பகுதிகளிடையேயும் தேவையான விதத்தில் தொடர்புகளை ஏற்ப்படுத்தும் கருமத்தில் இருந்தது போலவே அமைந்தது. நித்திரையும் இளைப்பாறலும் உருவாக்குமைக்கு உகந்தவை, என பொதுவாகவே மக்களிடம் இருக்கும் கருத்தினை இந்த அவதானிப்பு ஊர்ஜிதம் செய்வதாகவே அமைகிறது.


மாறாக, இப்படியாக இளைப்பாறியபடி இருந்து கொண்டு உந்துளிராக்கம் செய்த மூளைகளை,



கதைகளைப் புனையுமாறு பணித்த போது நிலமைகளோ வேறு. மூளையோ மிகவும் ஆரவாரமான இடமாக மாறியது, சிந்தனை செய்யும் அதன் பகுதிகள் அதிக அளவில் உயிர் பெற்றன, அல்ப்பா அலைகள் அற்றுப் போயின. இவையாவும் ஒழுங்கான வழியிலான சிந்தனைப் போக்கையே சுட்டிக் காட்டின என்பது விஞ்ஞான விளக்கம். சிறப்பான கதைகளை புனைந்தவர்களே இவ் இருவித மூளையின் நடத்தைகளுள் பாரிய அளவான வேறுபாட்டினை கொண்டவராக காணப்பட்டனர். அதாவது, உந்துளிராக்கத்துக்கும் பரப்பாக்கத்துக்கும் இடையே உள்ள வெளி பெரிதானபோதே கதையின் சிறப்பும் அதிகரித்தது என அவதானிக்கப்பட்டது. "உண்மையிலே உருவாக்கும் தன்மை கொண்டவர்கள் ஒரு பொறி முறையிலிருந்து பல தாண்டி இன்னொன்றுக்கு வேகமாகவே மாறிடக் கூடியவர்களாக உள்ளனர். உருவாக்கும் தன்மை குறைந்தவர்கள் இந்த மூளையின் பொறி மாற்றத்துக்கு (gear change) இணைவிலாதவர்கள்" என்கிறார் பிறிஸ்டல் பல்கலைக்கழக மனோவியல் நிபுணர் Guy Claxton. எனவே உருவாக்குமை பல்துறை சிந்தனைப் போக்கில் இடம் பெறும் ஒரு விடயம். இதில் சிறப்பாக கருமம் செய்பவர்கள் தமது மனோவியல் நிலைபாடுகளில் ஒன்றிலிருந்து மற்றதுக்காய் மிக இலகுவில் சுயமாகவே மாறிடக் கூடியர்களே, முடிவில் சிறப்பான படைப்புகளை தரக் கூடியவர்கள். அதாவது, சிறப்பான உருவாக்குமை, உந்துளிராக்கம் பரப்பாக்கம் என மூளையுள் இருகட்ட செய்யுமைகளாக பிறிதுபடுத்திப் பார்க்காது, அவ்விரு வகைகளிடையேயும் ஊஞ்சல் ஆடுவது போன்ற நடத்தையால் விளைவது என்று கூறுவது சாலப் பொருந்தும்.

தற்போது பலர் இவ்விரு கட்டங்களிடையேயான மாற்றங்களையும் அவை மூளையின் எப் பாகங்களில் இடம் பெறுகின்றன என்பதையும் அறிவதற்கான பரிசோதனைகளில் கவனம் செலுத்துகின்றனர். மூளை என்பது உப-அங்கங்களையோ பாகங் களையோ கொண்டதல்ல. இருந்தும் அது வேலை செய்யும் துறைகளைப் பொறுத்து தனது வித்தியாசமான பகுதிகளை கூடிய அளவில் பாவனப்படுத்துகிறது என்பதை தெளிவாக சோதனைகள் காட்டுகின்றன. மூளையை மிகவும் எழுந்தமாக பார்க்கும்போது அதற்கு வலது-இடது என இரு பாகங்கள் உண்டு என்பதை காணலாம். அதனைவிட, மூளையை விலாவுடன், மின்சார கம்பிகளின் இணைப்புகள்போல, தொடுத்து வைக்கும் பகுதியையும் இனம் காணலாம். அதன்பின், பலவிதமான பௌதீகம் தந்த சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்போதே, மூளையும் தனது செய்துறைகளூடாக தன்னிடமும் பல பகுதிகள் உண்டு என்று வெளிக்காட்டுகின்றது.

உருவாக்குமையில் ஈடுபடும்போது மூளையின் வலப்பகுதி கூடிய பங்கினை வகிக்கிறது என்கிறார் மார்டின்டேல் தனது இன்னொரு ஆய்வின் மூலம். ஆனால் எவ்வித உருவாக்குமையில் மனிதன் ஈடுபட்டுள்ளான் என்பதும் இங்கே நிலமைகளை நிச்சயம் செய்கின்றன. மொழி (language), முப்பரிணாம உருவங்கள் (imagery), இடவெளியின் உணர்வு (spacial awareness), இப்படியாக சிந்தனைத் துறைகள் மாறும்போது மூளையின் வித்தியாசமான பகுதிகள் அதற்கேற்ப செயற்படுகின்றன. மேலும், துறைகளுக்கு உகந்தவாறு மனிதனது மூளையுள் அதிக பாவனத்திலுள்ள பகுதிகள் பருமனாகவும் வளர்வு காண்கின்றன எனவும் அவதானிக்கப்பட்டுள்ளது. பௌதீக, கணித நிபுணர்களிடம் பருத்த நடுப் பகுதியும் (parietal lobes), எழுத்தாளர்கள் அல்லது மொழிப் பிரயோகத்தில் அதிகம் தங்கியவர் களிடம் பருத்த முன் பகுதியும் (frontal and temporal lobes) காணப்படுகின்றன. இவ்வகையில் மனிதனது பாவனைகளின் நிமிர்த் தம் மூளையின் பகுதிகள் என அவதானிப்பூடான கணிப்புகள் செய்யப்படுகின்ற போதிலும் பொதுவாக என்னதான் துறையாகினும், உருவாக்குமை எனும் போது மூளையின் பல பாகங்களும் ஏதோவிதத்தில் இணைந்து வேலை செய்ய வேண்டியே உள்ளன. மூளையின் முன்பாகம், பொதுவாக ஒரு சந்தியிலுள்ள இணைப்பு பொறிபோல தகவல் சமிஞைகளை கொண்டு செல்லும் இரசாயண பொருட்களை கையாண்டு கருமம் புரிவதால், அது எப்போதும் உருவாக்குமையில்ஈடுபட்டே இருக்கும்.எந்தவொரு சிந்தனைத் துளியும் தகவல் என்பதையும், தகவல் என்பது சக்தி என்பதையும், நாம் ஏற்றாகவேண்டும். எனவே இந்த சக்தியை எவ்வாறு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடம் கொண்டு செல்வதிலேயே மற்றைய விடயங்கள் யாவும் தங்கி உள்ளன. நோறாறெனலின் அல்லது நோறிபையின்பிறீன் Noradrenalin or norepinephrine என்ற இரசாயணப் பொருள் எமது மூளையின் பல பாகங்களும் எவ்வளவு சுலபமாக தம்முள் பேசிக் கொள்கின்றன என்பதை கையாளுகின்றன. இவை குறைவான அளவில் உள்ளபோது மூளையின் பல பாங்களும் ஏதோ கருத்துரையாடலில் பங்கு கொள்வது போல நடந்து கொள்கின்றன. உருவாக்குமையின் முதல்கட்டத்துக்கு இவை குறைவாக இருப்பதே உகந்தது. ஆனால் இரண்டாம் கட்டத்தை அடைந்தவுடன், நடந்த கருத்துரையாடலின் முடிவுகளை கோர்த்து சொல்ல வேண்டியது போல, ஒரு சில பகுதிகளே இன்னமும் தொடர்பில் இருப்பதும், இந்த இரசாயணத்தின் அளவு கூடியிருப்பதும் காணக் கூயதாக உள்ளது.



Cerebral cortex

எவ்வளவுதான் திறமையான மூளைக்கலங்க ளின் வலைத்தொடர்புகள் (neural networks), அதன் மேலான கையாளுமையும் மூளைக்கு இருந்தாலும் அதனைக் காவித்திரியும் மனிதனுக்கு தகுந்த சமூக வலைத் தொடர்புகள் (social networks) இல்லாது போகும் போது உருவாக்குமைக்கு எதுவித பிரயோகமும் அற்றதாகவே உள்ளது என்கிறார் நியூ மெக்சிக்கோ் பல்கலை கழகத்து Vera John-Steiner. ☑

☐ 'உருவாக்குமை' என்ற தலைப்பிலான இக்கட்டுரை "தேசம்" இதழுக்காக வைகாசி, 2006 ஆண்டு எழுதப்பட்டது. இதன் முழு வடிவத்தை 'விஞ்ஞான கலை கழகத்தின்' "www.eelavarnet.org" இணையத்தளத்தில் பார்க்கலாம்.



ஆர் புதியவன்

# விடிய விடிய கதையாடிய ஒன்றுமில்லாத மண்

ஒன்றுமில்லாத மண் படத்திற்கு ஒரு இரவு முழுக்க கதையாடி விடிய எழுந்து ஒரு பேப்பரில் ஒருபக்கம் நிறைய ஒன்றுமில்லாமல் விசர்த்தனம் மன்னிக்கவும் விமர்சனம் எழுதியிருக்கிறார் அண்ணன் சேயோன். விமர்சனம் என்று சொல வதைக் காட்டிலும் அட்வைஸ் என்று எடுத்துக் கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். ஆக்கங்கள் எழுதுவதிலிருந்து சேயோன் அட்வைஸ் பண்ணும் நிலைக்கு உயர்ந்திருப்பது என்போன்றவர்களுக்கு நல்லது தான். இனி வரும் காலங்களில் சேயோன் எனது மதியுரைஞராக பணிபுரிவார் என்பதை தேசம் வாசகர்களுக்குத் தெரியப்படுத்துவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் கூட.

மண் படம் விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட படம் அல்ல. மண் உலகத்தின் உச்ச தரத்தை எட்டிய படமும் அல்ல. உச்ச தரம் என்பதற்கு வரைவிலக்கணமும் கிடையாது தானே.

அந்த வகையில் சேயோனின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டியது எனது கடமை. இலவசம் என்றாலும் அட்வைஸ் அட்வைஸ்தானே. ஆனால் சேயோன் இதய சுத்தியோடு விமர்சனம் வைக்கவில்லை. அல்லது நோக்கம் என்னைப் புலிகளுக்கு எதிரானவன் என்று இனம்காட்டி நல்ல பிள்ளை என்று பேரெடுத்து ஐபிசி வானொலி யில் இழந்த பதவியைபெற்றுக் கொள்ளலாமோ என்பதுதான்.

படம் தொடர்பாக இவர் சொன்ன சில விடயங்களைப் பார்ப்போம்.

☞ பாடசாலைக்குத் தண்ணி அடித்துவிட்டு மாணவர்கள் போகிறார்கள்:

இலங்கையில் எத்தனையோ மாணவர்கள் ஏன் ஆசிரியர்கள் கூட மது அருந்திவிட்டு பாடசாலைக்குப் போயிருக்கிறார்கள். அதை விட்டுவிடுவோம். மண் படத்தில் அப்படி எந்தக் காட்சியும் இல்லை என்பது படத்தை இதுவரை பார்த்த அத்தனை பேருக்கும் தெரியும் - மூவரைத் தவிர- விடிய விடிய கதையாடிய ஒரு பேப்பர் ஆசிரியர் குழுதான் அந்த மூவர். இல்லாத காட்சி படத்தில் இருந்ததாக சொல்ல வேண்டிய தேவை என்ன? ஒன்றில் பார்த்த மூவரும் தண்ணிவெறியில் படத்தைப் பார்த்திருக்க வேண்டும். (சேயோனுக்கு உண்மை விளங்கும்.) அல்லது இரவு வேலைசெய்து விட்டு வந்து படம் பார்க்கும் போது நித்திரை கொண்டிருக்க வேண்டும். படத்தில் வரும் மாண வர்கள் பாடசாலைக்குச் செல்லும் போதோ அன்றி மாலை வேளைகளிலோ ஏன் எப்போதாவது மது அருந்துவதாக எந்தக் காட்சியும் அமைக்கப் படவில்லை. இடம் பெறவும் இல்லை.

☞ ஒன்றாகவே பாடசாலைக்குச் செல்கிறார்கள்- வருகிறார்கள்:

வவுனியா மாவட்டத்தில் இருக்கின்ற எந்த பாடசாலைக்கு மாணவர்கள் ஒன்றாகச் செல்ல வில்லை. சுமார் 256 பாடசாலைகளைக் கொண்ட வவுனியா மாவட்டத்தில் நகரப் பகுதியில் இருக்கும் மகளிர் மகாவித்தியாலயத்தைத் தவிர அத்தனை பாடசாலைகளுமே கலவன் பாடசா



லைகள். 250க்கும் மேற்பட்ட பாடசாலைகள் கிராமப்புறப் பாடசாலைகள். அப்படிப்பட்ட பாடசாலை ஒன்றுதான் கனகராயன்குளம் மகா வித்தியாலயம். சுமார் மூன்றிலிருந்து நான்கு மைல்தொலைவிலிருந்து இந்தப் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் காட்டுப் பாதைகளினூடாக பயணிக்க வேண்டியது அந்தக் கிராமங்களின் கட்டாயம். காட்டுப் பாதையினூடாக தனித்து பயணிக்காது கூட்டமாக போகவேண்டியது நிர்ப்பந்தம். மற்றது அதுவே வன்னிக் கிராமங்களில் காணக்கூடிய பண்பியலும் கூட. கனகராயன்குள மகாவித்தியாலய மாணவர்கள் ஒன்றாக பள்ளிக்கூடம் போயிருப்பார்களா என்பதை குறைந்த பட்சம் கூட அறிந்து கொள்ள விரும்பாத விருப்பமில்லாத சேயோன் (படம்) ஒரு பேப்பரில் எழுதியிருப்பதை எப்படி விமர்சனம் என்று ஏற்றுக் கொள்வது.?

இங்கு இன்னும் சில கசப்பான உண்மைகளைப் பேச வேண்டிய தேவை இருக்கிறது. சேயோனுக்கு வன்னியிலிருக்கும் கிராமங்களின் பெயர்கள் புலிகளின் வன்னி இடப்பெயர்வுக்கும் ஜெயசிக்குறு நடவடிக்கையின் பின்புதான் தெரியவந்தது என்பது தான் உண்மை. அப்படிப் பட்டவருக்கு வன்னி மாணவர்கள் ஒன்றாகப் பாடசலைக்குப் போனது ஆச்சயரியப்பட வைத்ததில் வியப்பில்லை.



அவர் பார்வையில் வன்னி மாணவர்கள் அதுவும் எண்பதுகளில் எப்படி நாகரிகமாக பழகி இருக்க முடியும் என்று ஆச்சரியப்பட்டது அவர் வன்னி தொடர்பாக கொண்டிருந்த சிந்தனையை காட்டுகிறது. கனகராயன் குளத்ததைச் சேர்ந்த 50 பேரை ஒழுங்கு செய்து கொடுக்க நான் தயார். இவர் யதார்த்தம் இல்லை என்று சென்ன எந்த ஒரு காட்சியுடனாவது இவர்களில் 5 பேர் சொன்னால் கூட இதே தேசம் சஞ்சிகையில் நான் இவரிடம் மன்னிப்புக் கோரத் தயார். சரியென்று இவரால் நிருபிக்க முடியுமா?

☞ கதை பலவீனமாக இருக்கிறது என்பது இவரது அடுத்த கண்டுபிடிப்பு:

இருக்கலாம். இது எனது சொந்தக் கதையென்பதால் வீக்காய் இருந்திருக்கலாம். எனக்கு யாருடைய கதையையும் திருடி என் பெயரில் படம் எடுக்கத் தெரியாது. உண்மையில் 'நாச்சியார் திருமொழி' என்ற பெயரில் தான் படம் செய்யத் தொடங்கினேன்.

இந்தக் கதையை செய்தால் எழுதியவர் இரவி அருணாச்சலம் என்று குறிப்பிட வேண்டும். அப்படியென்றால் ஒறிஜினல் கதையெழுதிய பவானி கவலைப்படுவார். சரி பவானி எழுதிய இனம் காணல் என்ற தலைப்பில் படம் எடுத்தால் இரவி அருணாச்சலம் கவலைப்படுவார். எதற்கு வம்பு. வீக்கெண்டாலும் பரவாயில்லை சொந்தக் கதையை எடுப்பது என்று முடிவு செய்தமையால் தான் மண் படம் எடுக்க வேண்டி வந்தது. சேயோனுக்கு இது தெரிந்திருக்க நியாயமில்லை. அதனால் தான் வீக் என்று கண்டுபிடித்த உடனே ஒரு பேப்பரிலை ஒண்டுமில்லை எண்டு ஒரு பக்கம் முழுக்க எழுதிட்டார்.

வன்னியில் (2005ல்) எப்படித் தண்ணியடிக்க முடியும் என்பது இவரது இன்னொரு வக்காலத்து.

வன்னியில் மதுபானம் அருந்துவது தடை என்று அறிவிக்கவில்லையே. களியாட்டங்களில் மது அருந்துவது இன்று நேற்று வந்த பழக்கம் இல்லையே? சிலவேளை வன்னியிலை இருக்கிறவர்கள் எப்படி அராக் அடிக்கலாம் என்று எண்ணுகிறாரோ சேயோன். சேயோன் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள் தண்ணியடிப்பது சிலருக்கு மட்டும் வழங்கப்பட்ட பிரத்தியேக உரிமை கிடையாது. உண்மையில் அண்மையில் கிடைத்த

தகவல்களின்படி வன்னியில் விசேட சாராயம் விற்பனையாவதும்அதற்குவரி அறவிடப்படுவதும் தங்களுக்குத் தெரியாதா? வரிந்து கட்டிக் கொண்டு நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எனக்கும் தெரியும் வன்னியிலும் புரியும்.

ஒரு படைப்புத் தொடர்பான விமர்சனம் என்பது அந்தப் படைப்பாளியை மேம்படுத்தவும் மேலும் படைப்புக்களை உருவாக்கவும் செய்யப் படவேண்டுமே தவிர சேயோனைப் போல காழ்ப்புணர்வுகளைக் கொட்டித் தீர்க்கும் களமாக அமையக் கூடாது. வன்னியில் ஒரு கிராமம் எப்படி இருந்தது அதன் வாழ்வியல் பின்னணி என்ன? படத்திலே வருகின்ற காட்சிகள் பிரதிபலிப்பது போன்று அங்கு வாழ்வியல் நடைமுறை இருந்திருக்குமா என்பதை ஒரு எழுத்தாளன் நன்கு சிந்தித்திருக்கவேண்டும். அது பற்றி குறைந்த பட்சம் அறிந்துகொள்ளும் ஆர்வம் இருந்திருக்க வேண்டும். எதுவுமே இல்லாமல் எழுந்தமானமாக எழுதப்பட்ட ஒருவிமர்சனத்திற்கு ஏன் விடிய விடிய கதையாடினீர்கள் என்பது எனக்கு இன்னும் புரியவில்லை.

சேயோனுக்கு அருகில் அமர்ந்து படம் பார்த்த அவர் நண்பர் சொல்கிறார் கனகராயன்குளத்தில் ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று. அதில் நக்கல் வேறு. 45 பட்டதாரிகள். 65 வீதத்திற்கு மேல் உயர்தரம் வரை கல்வி கற்றவர்கள். கதை நடக்கும் காலப்பகுதியில் 900 மாணவர்கள். 45 ஆசிரியர்கள். உயர்தர வகுப்பு வரை தரம் உயர்த்தப்பட்ட பாடசாலையில் தாங்ஸ், சொறி என்ற வார்த்தைப் பிரயோகங்கள் இவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கின்றதென்றால் படம் பார்க்கிறபோது சேயோனின் வன்னி பற்றிய சிந்தனை எந்த மட்டத்திலே இருந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்கு சொல்லத் தேவை இல்லை.

படம் தொடங்கிய நேரத்தில் இருந்து முடியும் வரை மற்றைய பார்வையாளர்களின் நலனில் கொஞ்சம்கூடஅக்கறைஇல்லாமல்பெரியசத்தத்தில் பேசிக் கொண்டிருந்த இவர்கள் வைத்திருக்கும் விமர்சனத்தில் எப்படி ஆய்வை எதிர்பார்ப்பது. உண்மையில் கிங்ஸ்ரன் கல்லூரியில் என்னிடம் பயிலும் மாணவிகள் இருவர் இடைவேளையுடன் வீடு செல்ல முனைந்ததும் அவர்கள் குளப்பம் விளைவிப்பவர்கள் அல்ல பத்திரிகைக் காரர்கள் பயப்படாமல் படம் பாருங்கள் என்று கூறுமளவிற்கு இடையூறு இருந்ததையும் அவர்க ளால் மறுக்க முடியுமா?



எனது முன்னைய படங்களுக்கு கிடைத்த காரசாரமாக காத்திரமான விமர்சனங்கள் எனக்கு நிறையவே உதவியிருக்கின்றன. அதுவே என் தேவையும் கூட. அந்தவகையில் உதயன் பத்திரிகையில் வந்த விமர்சனம் உட்பட நிறைய விமர்சனங்கள் மண் தொடர்பாக வந்திருக்கின்றன. சில எனக்குப் புதிய பாடத்தைக் கொடுத்திருக்கிறது. சேயோன் போன்றவர்களின் ஆக்கங்கள் அவர்க ளின் எழுத்து திறனில் தரத்தைக் குறைக்கப் பயன்படுமே தவிர படைப்பாளியை உருவாக்கப் போவதில்லை. ஒருபேப்பர் போன்ற பொறுப்புள்ள பத்திரிகையின் ஆசிரியர் குழு விடிய விடிய கதையாடி படத்தில் இல்லாத காட்சிகளை இருந்ததாக வரிந்து கட்டி விமர்சிக்க வேண்டியதன் காரணம் எனக்குப் புரியவில்லை.

நான் சொன்ன கருத்துக்களோடு வாசகர்களுக்கு உடன் பாடில்லை என்றால் ஒருமுறை படத்தைப் பாருங்கள். சேயோனின் சாயம் வெளுக்க வேறு சாட்சியம் தேவையில்லை. என்னைப் பொறுத்த வரையில் நான் படம் படைக்கும் பிரம்மன். நான் சிருஸ்டித்த மண் எந்தக் குறைபாடும் இல்லாத குழந்தையல்ல. சிலர் திட்டுவார்கள் சிலர் மெச்சுவார்கள். சிலர் அஞ்சுவார்கள். காத்திரமான விமர்சனங்களை உள்வாங்கிக் கொண்டு என் அடுத்த படைப்புக்கு நான் தயாராகிக்கொண்டிரு க்கிறேன். (தங்கர் பச்சான் போன்று கதை திருடி (பார்க்க: தேசம், இதழ் 24, பக். 08) படம் செய்யும் இயக்குனர்களிடம் சேயோன் அவர்களே எனக்கு கற்றுக் கொள்ள எதுவும் இல்லை. முடிந்தால் பிரித்தானியாவில் யாரும் இருந்தால் கொஞ்ச அட்வைஸ் பண்ணுங்கோ உதவியாயிருக்கும்.

தாயை நிர்கதியாக விட்டுவிட்டு போவது யதார்த்தமாகப் படவில்லை என்றும் முடிவு தனி மனித தண்டனையல்ல என்றும் கூட சில விமர்சங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன, என் கதை கதாநாயகன் தப்பித்துச் செல்கிறான். வடக்கிலே இருந்து மலையகம் சென்று கதியற்ற எத்தனையோ இளம் பெண்களை நடித்து கெடுத்து விட்டு தப்பி மீண்டும் வடக்கிற்கு வந்த கதைகளைத் தெர-ியாமல் இருக்கிறீர்களா ? அல்லது தங்கள்



வண்டவாளங்கள் தெரிய வருகின்றதே என்று பயப்படுகிறீர்களா?

வவுனியாவில் இப்படி நடந்த சம்பவங்கள் ஏராளம். அப்படி என்னுடன் நல்ல தோழி யாக பழகிய ஒரு மலையக யுவதிக்கு நடந்த கொடூரம்தான் இந்த மண். எந்த மாணவனும் இப்படிச் செய்யமாட்டான் என்று நீங்கள் வைக்கிற விமர்சனங்களை ஒரு புறம் வைத்து விட்டு 77ல் 83ல் அகதிகளாக வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களிடம் சற்று உரையாடிப் பருங்கள் வவுனி யாவில், முல்லைத்தீவில், மன்னாரில் அவர்களுக்கு நடந்த கொடுமைகள் யாழ்ப்பாணத்தில் வேலை க்காரிகளாக இவர்கள் பட்ட துன்பங்களோடு ஒப்பிடும் போது மண்ணில் சொன்னது ஒரு துளி என்பது புரியும். ஏன் அவ்வளவு தூரம் செல்வான் சில மாதங்களுக்கு முன் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுமியை பல தடவைகள் பாலி யல் வல்லுறவுக்கு உட்படுத்திய யாழ் பேராசிரியர் செய்த கொடூரத்தை சேயோன் அறியவில்லையோ. அப்பேராசிரியரும் அவருக்கு வக்காளத்து வாங்கி ய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்னும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்

தாயை ஏமாற்றி விட்டு சென்ற தகப்பனை காத்திருந்து பழிவாங்கும் மகனின் தீர்ப்பு வெறும் தனி மனிதக் கொலையல்ல. கஜன் என்ற பாத்திரம் தம்மை ஒடுக்கும் வர்க்கத்திற்கு வைத்த வேட்டுத் தான் அது. துரையப்பாவுக்கு வைத்த வேட்டு எப்படி தனி மனித வேட்டுக் கிடையா தோ அது போலத்தான் கஜன் வைத்த வேட்டும். இனியும் மலையக மக்கள் பொறுமையாய் இருக்கத் தயாரில்லை என்பதே சொல்லப்பட்ட சேதி. ☑

(6ம் பக்கத் தொடர்ச்சி .....)

அனுப்பி வையுங்கள் என்று 'ஒரு' தொலைபேசி அழைப்பு பத்திரிகை காரியாலயத்தில் இருந்து வந்தது. வேட்பாளருக்கோ அங்க கிள்ளின புழுகம். மறுநாளே தான் அதிகம் வெள்ளையாக இளமையாக இருக்கிற படத்தை அனுப்பி வைத்தார். இரண்டு நாள் கழித்து அதே பேப்பரில் இருந்து இன்னொரு அழைப்பு......... எங்களுடைய terms and conditions உடன் சம்மதம் தானே? என்று. என்ன??? என்று கேட்க நீங்கள் இந்த publicity க்கு 50 பவுண் அனுப்ப வேண்டும் என்றார்கள். ஐம்பது பவுண் தாளை ஒரு நாளும் முழுசாக கண்டிராத அந்த வேட்பாளருக்கு தூக்கிவாரிப் போட்டது. இப்ப எல்லாம் பிசினஸ் தான் என்று ரொம்ப feel பண்ணினார்.

## நுளம்புக்கடிக்கு எதிராக

நாங்கள் வாழுகிற நாட்டின் அரசியலில் தமிழர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பது உண்மை தான். அதற்காக நிலமை இப்பிடி நாறும் என்று கனவில் கூட நான் எதிர்பார்க்கவில்லை. நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் நின்ற தமிழர்கள் என்றால் எக்கச்சக்கம். ரஜனிகாந் தொடக்கம் சுருளி வரை தேர்தலில் குதித்தார்கள். சிலர் குடும்பமாக குதித்தார்கள். கோயில்ல கழட்டி விடப்பட்டவர்கள், பேப்பர்காரர்கள் என்று எக்கச்சக்கம் பேர் களம் புகுந்தார்கள். ஈழம் கேட்டு Newham இல் ஒருவர் தேர்தலில் குதித்தார். பண்டத்தரிப்பில் நுளம்பு கடிக்கு எதிராக அடுத்த லண்டன் தேர்தலில் நான் நிற்பது மட்டும் நிச்சயம். உங்கள் வாக்குகளை எனக்கு போடுங்கோ.

## உள்ளே வெளியே

ஈழ விடுதலைப் போராட்டம் லண்டனில படுறபாட்டைப் பார்த்தா ரொம்ப வேதனையாத்தான் இருக்கு. தங்கட சொந்தப் பிரச்சினைக்கெல்லாம் விடுதலைப் போராட்டத்தை தெருவுக்கு இழுக்கி றாங்கள். தமிழ் ஒலி பரப்புக் குட்டையில் ஊறி தண்ணி அடித்த மட்டைகள் எல்லாம் இன்டைக்கு தங்கட personalty clashக்கு ஈழ விடுதலையையும் side ல இழுத்து விட்டிருக்கினம். அதென்னண்டா உதுகள உள்ளுக்கு வச்சிருந்தா வெளியில மூத்திரம் அடிக்குங்கள். வெளில விட்டா உள்ளுக்கு அடிக்குங்கள். பிறகு நாறிப்போம்.

## மீண்டும் அதே

அன்றைக்கு ஈழத்தில உண்ணாவிரதம் இருந்தவர்களுக்கு சாப்பாடு தீத்திவிட்ட அந்த பேரவை இளைஞர் லண்டனில உண்ணாவிரதத்தை ஆதரித்து வாழ்த்தினார். வரலாற்றை வடிவாக கற்றுக் கொள்ளாவிட்டால் அது மீளவும் நிகழும் என்றதற்கு இன்னும் என்ன ஆதாரம் வேண்டும்.☑



சபா நாவலன்

# மீண்டும் அதே கேள்வி: நண்பர்கள் யார்? எதிரிகள் யார் ?

உலகத்தில் எந்தவொரு பிரச்சினைக்கும் ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி உண்டு. அந்தந்தச் சமூக நிலையிலுள்ள சமூக, பொருளாதார கலாச்சார உறவுகளையும், அது சார்ந்த நலன்களையும் நிராகரித்து, எந்தப் பிரச்சினையையும் தனிமைப் படுத்திப் பார்ப்பது என்பது மொத்த சமூகத்தின் எதிர்காலத்தையும் இருளின் விளிம்புக்குள் தள்ளிவிடு வதாகவே அமையும். தமிழ் ஈழத்திற்கான தேச விடுதலைப் போராட்டம் என்பதன் தோல்வியின் அடிப்படையே யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தின் இவ்வாறான உணர்ச்சிவயப்பட்ட மேலெழுந்தவாரியான பார்வையின் விளைவுகளில் ஒன்று. மத்தியதர வர்க்கத்தின் உணர்ச்சிவயப்பட்ட இளைஞர்களின் வன்முறைப் போராட் டமாக ஆரம்பித்த ஈழ விடுதலைப் போராட்டமானது, 1983இல் விரி வடைந்தபோது, இந்தப் போராட்டத்தின் அனைத்து தீர்மானிக்கும் சக்திகளும் இந்த மத்தியதர வர்க்க இயல்பைக் கொண்டிருந்தன.

**தமிழ் ஈழத்திற்கான தேச விடுதலைப் போராட்டம் என்பதன் தோல்வியின் அடிப்படையே, யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தின் இவ்வாறான உணர்ச்சிவயப்பட்ட மேலெழுந்தவாரியான பார்வையின் விளைவுகளில் ஒன்று.**

சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து சமூக உணர்வுள்ள ஏனைய சக்திகள், இந்தப் போராட்டத்தின் உணர்வுபூர்வமான சக்திகளை ஆராயுமாறும், நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்று இனம் காணுமாறும் குரல்கொடுத்த போது, அவர்களின் குரல்வளைகள் நசுக்கப்பட்டன. ஸ்ரீலங்கா இனவாத பாசிச அரசாங்கம் தான் எமது பிரதான எதிரியென்றும், இதனை வெற்றிகொண்ட பின்னர் மற்றைய முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வோம் என்றும் உணர்ச்சிவசப்பட்ட இந்த மத்தியதர வர்க்கத்தின் கோஷங்கள் தான் இன்றைய LTTE இன் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கு காரணம்.

இன்றைக்கு வரலாற்றின் பக்கங்கள் மறுபடி திருப்பப்படு கின்றன. விக்கிரமாதித்தனின் வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டுள்ளது. அதே வாதப் பிரதிவாதங்கள். அன்றைக்கு ஸ்ரீலங்கா அரசு இருந்த இடத்துக்கு வடக்கு கிழக்கில் இன்றைக்கு LTTE. ஆனால் நமது மத்தியதர வர்க்க குணாம்சம் மட்டும் அதே இடத்தில் அப்படியே இருக்கின்றது.

LTTE இன் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்பது மறுப்பதற் கில்லை. ஆனால் பிரச்சினை என்னவென்றால், அதற்காக எந்தப் பிசாசோடும் கூட்டுச்சேரத் தயாராக இருப்பதுதான், 1983ஐ மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகின்றது.

புலிகளுக்கு எதிர் என்ற ஒரே காரணத்திற்காக, ஸ்ரீலங்கா அரசின் இனவாதத்தையும் அதன் பாசிசப் பிரிவுகளையும் சேர்ந்து ஆதரிக்கின்ற ஜனநாயக சக்திகள், 1983இல் நடந்ததைப் போலவே, மறுபடி நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்று இனம்காண மறுக்கின்றனர். தமக்கு முன்னாலிருக்கின்ற பிரதான பிரச்சினைகளைக் கண்டு உணர்ச்சி வசப்படுகின்றனர். இவர்கள் நண்பர்களையும் எதிரிகளையும் இனம் காண மறுப்பதனூடாக மறுபடியும் கிடைத்த இந்த சமூகச் சந்தர்ப்பத்தை தம்மை அறியாமலே யே, சரியாகப் பயன்படுத்தத் தவறுகின்றனர்.

எவ்வாறு 83இல் போராட்டத்திற் குப் புறப்பட்டவர்களைத் தவறானவர்கள் என்று கூற முடியாதோ, அவ்வாறே LTTEஇன் ஜனநாயக விரோதப் போக்குகளை எதிர்ப்பதற்காக மற்ற எல்லாவற்றையும் மறந்து விடுகின்றவர்களையும் தவறானவர்கள் என்று கூறவில்லை. ஆனால் பிரச்சினைகளை ஆழமாகப் பார்க்குமாறு கோருகின்றோம்.

துப்பாக்கி சூடாறிவிடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவே மனித உயிர்களை தேடியழிக்கும் கொடூரத்திற்கு எதிராக, அதே துப்பாக்கிகளை தூக்கிக் கொண்டு அலைவதனூடாக மட்டுமே அதனை வென்றுவிட முடியாது. LTTE இன் இருப்பிற்கான அடிப்படைக் காரணத்தைப் புரிந்து கொள்வதிலிருந்தே இதற்கான தீர்வையும் கண்டறிய முடியும். ☑

**புலிகளுக்கு எதிர் என்ற ஒரே காரணத்திற்காக, ஸ்ரீலங்கா அரசின் இனவாதத்தையும் அதன் பாசிசப் பிரிவுகளையும் சேர்ந்து ஆதரிக்கின்ற ஜனநாயக சக்திகள், 1983இல் நடந்ததைப் போலவே, மறுபடியும் நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்று இனம்காண மறுக்கின்றனர்.**



**கோபால் – மும்பாய்**

# அரசியல் கைதிகளும் சித்திரவதையும்

அண்மைக் காலமாக அமெரிக்க அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கை குறித்த செய்திகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன. அமெரிக்க அரசு தான் சிறை வைத்திருக்கும் சட்ட விரோத போராளிகளை விசாரணை செய்யும் பொருட்டு, தனிப்பட்ட சித்திரவதை முகாம்களை நிறுவியுள்ளது. எனினும், இச்சித்திரவதை முகாம்கள் அமெரிக்க அரசுக்கு சாதகமான பிற நாடுகளில் குறிப்பாக பண்டைய சோவியத் ஆதரவு நாடுகளான போலந்து போன்ற நாடுகளிலும் நிறுவப்பட்டு செயற்பட்டு வந்தன என்ற செய்தி ஐரோப்பாவில் சிறு சலசலப்பினை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச மனிதஉரிமை அமைப்புத் தலைவரான ஆர்தர் லுயிஸ் அவர்களின் வார்த்தையில் சொல்லப்போனால், 'தீவிரவாதத்தின் மீதான போரின்' காரணமாகக் கைது செய்யப்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்படக் கூடாது என்று 1948ம் ஆண்டு ஜெனீவா உடன்பாட்டில் முன் நிறுத்தப்பட்ட சில அடிப்படை மனித உரிமை நிலைப்பாடுகள் (அமெரிக்காவின் இச்செயலால்) பெரிதும் பாதிப்படைந்திருந்தன. இந்தப் பின்னணியில் சித்திரவதை பற்றிய பன்னாட்டு நிலவரங்கள், மனித உரிமை நிலைப்பாடுகள் குறித்து அறியவேண்டிய அவசியம் உள்ளது.

சித்திரவதை முகாம்கள் குவாண்ட்நாமோ பே, பாஹ்ரா மற்றும் அபுகாரிப் போன்ற இடங்களில் நிறுவப்பட்டு இருந்தன. செப்ரம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் சந்தேகத்தின் பேரில் சிறைப்படுத்தப்பட்டவர்களை அமெரிக்க அரசு குவாண்ட்நாமோ பே சித்திரவதை முகாமில் அடைத்தது வைத்தது. பயங்கரவாதத்தின் மீதான போரில் சிறைப்பிடிக்கப்பட்ட இவர்கள், போர்க் கைதிகளுக்கான உரிமைகள் மறுக்கப்படும் வகையில், இக்கைதிகளை சட்டவிரோத போராளிகள் என்று பெயர் மாற்றி அழைக்கப்பட்டனர்.

சர்வதேச ஜெனிவா உடன்பாட்டின் அடிப்படையில் போர்க் கைதிகளுக்கான குறைந்தபட்ச மனித உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டும். சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) தயாரித்து வெளியிட்ட Gulag of our times என்ற அறிக்கையில் குவாண்ட்நாமோ பேயில் நடத்தப்பட்டு வரும் எக்ஸ் கதிர்வீச்சு முகாம் என்ற முகாமில் சிறைப்படுத்தப்பட்டவர்களுக்கு, முகாமில் உலாவச் செல்லும் போது கூட கண்களைக் கட்டியே வெளியில் கொண்டு செல்லப்பட்டனர் என்றும், சக சிறைக்கைதிகளுடன் பேச அனுமதிக்கப்படவில்லை என்றும், தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப்படுவதன்மூலம் போர்க்கைதிகள்விசாரணையின்போதுநெகிழ்ந்து உண்மையை உதிர்க்கத் தொடங்குவார்கள் என்ற அமெரிக்கக்கொள்கை பின்பற்றப்பட்டு வந்ததாகவும் குறிப்பிடுகின்றது.

இதே அறிக்கையில், போர்க் கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதாகவும், தூக்கமின்மை, உண்மை பேசவைக்கும் போதை மருந்துப் பிரயோகம், உதை, தனிமைப்படுத்தப்பட்ட அறைக் காவல், குளிர் மிகுந்த அறையில் அடைத்தல், உடலுக்கு ஏற்பில்லாத சூழ்நிலையில் தொடர்ந்து

அமர்ந்து இருக்கச் செய்தல் (uncomfortable posture) போன்ற பல வகையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். இவை குறித்து இவ்வறிக்கையில் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளன. 2005ம் ஆண்டு குவாண்ட்நாமோ பே கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து அமெரிக்க நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் காரணமாக, ஐ.நா.சபையின் சிறப்புக் குழுவொன்று குவாண்ட்நாமோ பே சிறையை மேற்பார்வையிட அனுமதிக்கப்படும் என்றும், குழுவினர் சிறைக் கைதிகளுடன் நேரடியான பேச்சுமூலம் உண்மையை அறிய முயலக்கூடாது என நிபந்தனை ஒன்றும் விதிக்கப்பட்டது. இந்த நிபந்தனை விதிக்கப்பட்டதன் காரணமாக ஐ.நா. குழுவினர் குவாண்ட்நாமோ பே சிறைக்குச் செல்லும் முயற்சியைக் கைவிட்டனர்.

குவாண்ட்நாமோ பே சிறைக் கைதியான ஜுமா அல் பேசாரி, தனது வழக்கறிஞரின் பேச்சிற்கு இணங்கி எழுதியளித்த குறிப்பேட்டின்படி கடந்த மூன்றாண்டுகளில் தாம் 600 முறை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், கேடான உணவு அருந்த நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் உடைந்த கண்ணாடிகள் பதித்த சுவர்களின்மீது நடக்கும்படி வற்புறுத்தப்பட்டதாகவும், கண்ணாடிகளின் கூர்ப் பகுதிகளின் மேல் செல்லும்போது தள்ளிவிடப்பட்டதாகவும், முட்கம்பியின் மீது நடக்கும்படி செய்யப்பட்டதாகவும், எரியும் சிகரெட்டை உடல்மீது வைத்து அழுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



குவாண்ட்நாமோ பே கியுபாவுக்குச் சொந்தமான நிலப்பரப்பில் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு சிறைக்கூடமாகும். இங்கு டெல்டா முகாம், இகுவானா முகாம் மற்றும் எக்ஸ் ரே முகாம் எனப் பலதரப்பட்ட சித்திரவதை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எக்ஸ் ரே முகாமில் ஆப்கான் மீதான போரில் கைதுசெய்யப்பட்ட ஆப்கானிஸ்தான் கைதிகள் பொதுவாகக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டனர். இம்முகாம் பின்னர் மூடப்பட்டு, இங்குள்ள அனைவரும் டெல்டா முகாமுக்கு மாற்றப்பட்டனர். டெல்டா முகாமில் முகாம் ஒன்றிலிருந்து ஆறு வரை தரம் பிரிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் அடைக்கப்படும் முகாம்கள், அதில் விசாரணைக்கு ஒத்துழைப்பவர்கள், பின்னர் சித்திரவதைக்குட்படுத்தப்பட வேண்டியவர்கள் எனத் தரவாரியாகப் பிரித்து அடைக்கப்பட்டனர். இம்முகாம்களின் செயற்பாடுகள் ஏதும் வெளி உலகில் அறியப்படவில்லை.

இகுவானா முகாமில் 2002 முதல் 2004ம் ஆண்டிற்குள் சிறைப்படுத்தப்பட்டவர்களுள் மூன்று சிறுவர்களும் அடங்குவர். 2005ம் ஆண்டு, சிறைப்படுத்தப்பட்டவர்கள் பற்றிய மறு ஆய்வு செய்யப்பட்டபோது, அதில் 38 பேர்கள் தவறுதலாகச் சிறைப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டனர்.

## அபுகாரிப் சித்திரவதை

இது ஒருபுறமிருக்க, ஈராக் நாட்டை ஆக்கிரமித்த பின்னர் அமெரிக்கா தனது கட்டுப்பாட்டின்கீழ் அந்நாட்டில் பல சிறைச்சாலைகளை சித்திரவதை முகாம்களாக மாற்றிவிட்டிருந்தது. அபுகாரிப் என்ற இடத்தில் நடத்தப்பட்ட சித்திரவதைக் கொடுமைகள் அம்பலமானபோது உலக நாடுகள் அனைத்தும் இந்த மனிதத் தன்மையற்ற ஈனமான செயற்பாட்டைக் கண்டித்தன. (இச்சிறையில் இடம்பெற்ற சித்திரவதைகள் சம்பந்தப்பட்டவர்களால் படம் பிடிக்கப்பட்டது. அதனை இவ்விணையத்தளத்தில் பார்க்கலாம்: http://www.antiwar.com/news/?articleid=8560)

சிறைக் கைதிகளை முகத்தில் அறைவது, குத்துவது, உதைப்பது மற்றும் சிறைக்கைதியின் கால்கள்மீது ஏறி மிதிப்பது என்பன, பெண் மற்றும் ஆண் சிறைக்கைதிகளை நிர்வாணப்படுத்திப் படம் பிடிப்பது, சிறைக்கைதிகளை வலுக்கட்டாயமாக பல்வேறு பாலியல் செயற்பாடுகளில் ஈடுபட வைத்துப் படம்பிடிப்பது, சிறைக்கைதிகளின் ஆடைகளை களைந்து அவர்களை நிர்வாணமாகப் பலமணிநேரம் நிறுத்திவைப்பது, நிர்வாணமாக்கப்பட்ட கைதியை தலையில் மணல்மூட்டையை சுமக்கச் செய்து பின்னர் அவரது விரல்கள் மற்றும் பிறப்புறுப்புகளில் மின்சாரக் கம்பியை செருகி

மின்சாரம் பாய்ச்சித் துன்புறுத்துவது இப்படியாகப் பல சித்திரவதை முறைகள் பிரயோகிக்கப்பட்டன என்று அமெரிக்க இராணுவ அதிகாரி டகுபா தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.

## பாஹிரா சிறைக்கூடம் ஆப்கானிஸ்தான்

பாஹிரா சித்திரவதைக் கூடத்தில் கைதிகளின் கைகள் சங்கிலியால் கட்டப்பட்டு, அறையின் மேல் உத்திரத்திலிருந்து தொங்கவிடப்பட்டு, வலுவாகத் தாக்கப்பட்டனர். இம்மாதிரியாக உதைத்துத் தாக்கப்பட்டதில் கைதிகளின் கால்கள் துண்டித்து அறுவை சிகிச்சை செய்யப்படும் அளவுக்குப் பாதித்திருந்தது. மேலும், கைதிகளின் ஆடைகள் களையப்பட்டு அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்கள் உடல்ரீதியாக பலத்த அழுத்தத்துக்குட்படுத்தப்படும் வகையில் அமர்த்தப்பட்டனர். மேலும் அவர்களை பய முறுத்தும்படியாக வெறிநாய்களும் பயன்படுத்தப் பட்டன. உறக்கம் மறுக்கப்பட்டனர்.

## அமெரிக்காவின் திட்டமிட்ட சித்திரவதைச் செயற்பாடுகள்

இவை யாவும் ஏதோ திட்டமிடப்படாமல், தவறுதலாகநடந்துவிட்டதாகக்குறிப்பிடப்பட்டால் அரசியல் புரிதலற்ற அமெரிக்க விசுவாசிகள் மட்டுமே அதனை நம்பிவிட முடியும். பாஹிரா சிறைக்கூடத்தில் சித்திரவதைக்குப் பெயர்போன அமெரிக்க இராணுவ உளவுப்பிரிவான 519இனை தலைமை வகித்தவர் காப்டன் கரொலின் வுட் என்பவர். இவர் ஆப்கானிஸ்தானில் டிசம்பர் 2002ம் ஆண்டு முதல் இத்தகைய சித்திரவதைகளை நடைமுறைப்படுத்தியுள்ளார். அப்போது பாஹிரா சித்திரவதை முகாமில் இரு கைதிகள் சித்திரவ தைக்குட்படுத்தப்பட்டு மரணமடைந்துள்ளனர். அதன் பின்பு அவர் அபுகாரிப்புக்கு மாற்றம் பெற்றிருந்தார்.

அபுகாரிப்வந்தபின்பு,பாஹிராவில் நடைமுறை ப்படுத்தப்பட்ட தனது சித்திரவதை முறையை அபுகாரிப்பிலும் இவர் நடைமுறைப்படுத்தினார். இவர் மேஜர் ஜெனரல் மில்லரின் (படம்) கீழ், குவாண்ட்நாமோ பே சித்திரவதைக் கூடத்தில் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர். மேஜர் ஜெனரல் மில்லர் குவாண்ட்நாமோ பே, சித்திரவதை முகாமில் சிறைப்படுத்தப்பட்ட கைதிகளை துன்புறுத்திய விதத்தை அங்கே சிறைப் பட்டுப் பின் வெளிவந்த மூன்று பிரிட்டிஸ் கைதிகள் விபரமாக வெளியிட்டு உள்ளனர். அபுகாரிப் சித்திரவதை பற்றிய செய்தி வெளிவந்த பின்னர், அதனை தலைமையேற்று நடத்த, விசாரிக்கவேண்டி, மேஜர் ஜெனரல் மில்லர் பணியமர்த்தப்பட்டார். குவாண்ட்நாமோ பே சித்திரவதையை முன் நின்றுநடத்தியவர், அபுகாரிப் சித்திரவதைக் கூடத்துக்கு தலைமையேற்க நியமிக்கப்பட்டது அறியாமையாலல்ல. இதுதான் அமெரிக்காவினால் சனநாயகத்திற்கு மதிப்பளிக்கப்படும் விதமாகும். அவர்கள் சதாமின் இராணுவ கொடூர ஆட்சியில் இருந்து விடுவிக்க வந்த விடுதலைப்படையினர் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள். மனிதத்துவத்துடன் இணைந்த மனித உரிமை மீறல்களை நடைமுறைப்படுத்துகின்றனர்.



## இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவரம்

உலகின் மிகப்பெரிய சனநாயக நாடாகக் கருதப்படும் இந்தியத் துணைக் கண்டத்தில் சித்திரவதை குறித்த நிலைப்பாடுகள் என்ன என்று அறிய முற்படுவோம். சமீபத்தில் தென்னிந்திய பகுதியில் சதாசிவம் கமிஸன் அறிக்கை நிறைவேற்றப்படவில்லை என்ற கோஸங்களை எழுப்பி அரசியல் கட்சிகள் தமது கருத்தை வெளியிட்டு வருகின்றன. சதாசிவ கமிஸன், ஓய்வுபெற்ற நீதிபதி சதாசிவம் அவர்களின் தலைமையில் வீரப்பன் வேட்டையில் காவல்துறையினர் அப்பாவி மக்கள், மலைவாழ் மக்கள் மீது தொடர்ந்த பொய்வழக்கு மற்றும் சித்திரவதைகளை ஆய்வுசெய்ய அமர்த்தப்பட்ட கமிஸனாகும்.

சதாசிவம் கமிஸன் அறிக்கையின் முன்பு சாட்சியமளித்த மலைவாழ்மக்கள் தம்மீது நடத்தப்பட்ட சித்திரவதையை விபரித்துள்ளனர். இதனை இன்று சர்வதேச அளவில் நாகரீகம் தரம் தாழ்ந்துவரும் காலகட்டத்தின் தாக்கமாகக் கருத இயலாது. 1980களில் ராஜன் படுகொலை எனப்

பரபரப்பாகப் பேசப்பட்டது. அது காவல்துறையின் சித்திரவதையில் கொலை செய்யப்பட்ட ராஜன் என்ற பரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவன் கதையாகும். அக்கல்லூரி மாணவன் காவல்துறையினரால் சந்தேகத்தின் பேரில் சிறைப்பிடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு கொலையுண்டான். கொங்கிரீட் உருளைகள் இரு கால்கள் மீது வைக்கப்பட்டு அவனது உடல்மீது உருட்டப்பட்டன என்றும் சித்திரவதைக்குப் பின்னர் சங்கிலிகளால் பிணைத்துக்கட்டட்டித் தனியான கூடங்களில் வைத்து பலமணிநேரம் நிற்கச்செய்தனர் என்றும், சித்திரவதை காரணமாக அம்மாணவன் உயிரிழந்தான் என்பதும் தென்னிந்தியா முழுவதும் அறிந்திருந்ததே.

இதே போன்று அதே காலகட்டத்திலேயே வட இந்தியாவின்பீகார்மாநிலத்தில்பகல்பூர்மாவட்டச் சிறைகளில் நூற்றுக்கும் அதிகமானவர்கள், சிறுவர் முதல் வயத முதிர்ந்தவர்கள் வரை வயது வேறுபாடின்றி சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, கண்களில் அமிலம் ஊற்றி கண்களைக் குருடாக்கவது, அல்லது கண்களைத் தோண்டி எடுப்பது என்று குருடாக்கப்பட்ட செய்தி தேசிய அளவிலான உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஆத்மாவையை நிலைகுலையச் செய்தது.




மேலும் அவசரகாலச் சட்டம் 1975 - 76ல் அமுலில் இருந்த கால கட்டத்தில் பொதுமக்கள் மட்டுமன்றி கருத்து மாறுபட்ட பல கட்சித்தலைவர்கள் உட்பட சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டவர்கள்தான். தமிழகத் தின் தலைசிறந்த கட்சித் தலைவர் மாறன். இவர் திமு.க.வைச் சேர்ந்தவர். சிறையில் சித்திர வதைக்குட்படுத்தப்பட்டு இதன் காரணமாகத் தனத சிறுநீரகம் பாதிக்கப்பட்டதென் பின்னர் இஸ்மாயில் கமிஸன் அறிக்கை மூலம் வெளிவந்தது. ஆனால் பிற்காலத்தில் மத்திய அமைச்சர்பதவியில்அமர்ந்தஇவர்சித்திரவதைக்கு எதிராக எங்கும் குரல் எழுப்பியதாகத் தகவல் இல்லை.

இந்தியாவில் சித்திரவதைக்கொடுமை இன்றும் நீடித்தவண்ணமேஉள்ளது. மிகப்பெரியஜனநாயக நாட என்றும் மனித உரிமைக்கான உத்திரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது என மார்தட்டிக்கொண்டு நடக்கும் இந்தியா இன்னும் சர்வதேச சித்திர வதைக்கு எதிரான convention இல் கையொப்பம் இடவில்லை. இவர்களது சனநாயகம் மனித உரிமை மீறல்களுக்கான சித்திரவதைகளை பாதுகாப்பதற்கான சனநாயகம் தானே?

தனது நிலப்பரப்பில் சித்திரவதை ஏதும் செய்யப்படவில்லை என்று இந்திய அரசாங்கம் கூறிவந்தபோதிலும், சித்திரவதைக்க எதிரான சர்வதேச conventionஇல் கையொப்பமிடத் தயாராக இல்லை. பிரிவினைவாதக் குழுக்களுக்கு எதிரான போர் நடத்தும் காரணத்தால் இக்கொன்வென்ஸனில் கையொப்பமிடுவதில்லை. குறிப்பாக வட கிழக்க மாநிலங்கள். அஸ்ஸாம் மற்றும் பஞ்சாப், ஜம்மு காஸ்மீர் பகுதியில் இந்திய அரசின் சித்திரவதைச் செயற்பாடுகள் பல்வேற மனித உரிமை அமைப்பகளால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வாக்குமூலங்களை தருவிப்பதற்கு பல்வேறு சித்திரவதை முறைகள் பிரயோகிக்கப்பட்டன. கால்களைஎந்தஅளவுமுடியுமோஅந்தஅளவுபரப்பி இரக்கச் செய்தல், பின்னர் மூட்டுக்களில் உள்ள பந்துகள் வெளியெ வரம்படி விரிப்பது, கைது செய்யப்பட்டவரின் கைகளை பின்னால் முதுகுப்புறம் கட்டி, கயிறு மூலம் உயரே இழுத்து அவரை வானத்தில் பறக்கவிட்டு தடி கொண்டு அடிப்பது, விரல் நுனி, முலை, நாக்கு, பிறப்ப உறுப்பு. மூலம் போன்ற பகதிகளில் மின்சாரம் செலுத்தித் துன்புறுத்துவது, மேலும் கால்களை விரித்து அதனிடையே உருளைக்கட்டைகளை கட்டி உதைப்பது, கான்கிரீட் உருளைக்களை தொடைமீது உருட்டி எடுப்பது போன்ற சித்திரவதைகள் பிரிவினைவாதக் குழக்களின் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர் மீதும் அல்லது பிரிவினைவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## சித்திரவதை குறித்த உலக நிலவரம்

ஜெனிவா உடன்படிக்கையின் படி (Geneva Convention) பொதுவாக எதிரிப்படையினரால் கைது செய்யப்பட்ட நபர் ஒரு சாதாரண குடிமகன் அல்லது மருத்துவ உதவிக்குழு உறுப்பினர் அல்லது போர்க் கைதி என்ற ஏதேனும் ஒன்றின்

கீழ் அடங்குவர். அதன் அடிப்படையில் அந்த நபருக்கான சட்டபூர்வமான சில உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. அதுவல்லாமல். இடைப்பட்ட எந்தவொரு நிலைப்பாடும் இருக்க முடியாது. சித்திரவதை, பிற கொடூரமான செயற்பாடுகள், மனிதத் தன்மையற்ற அல்லது தரக்குறைவான நடத்தைகளுக்கு அல்லது தண்டனைக்கு எதிரான கொன்வென்ஸன் என்ற உடன்படிக்கையின் மூலம் கைதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இது மட்டுமன்றி, கைதிகளை நடத்துவதற்கான குறைந்தபட்ச விதிமுறைகள், கைதிகளை நடத்துவதற்கான அடிப்படைக் கொள்கை நிலவரம், எந்தவகையான கைது செய்யப்பட்டவர்களின் பாதுகாப்பிற்கான அடிப்படைக்கொள்கை நிலவரம், என பல்வெறு பிற சட்டவிதிகளின் மூலம் கைதிகளை மனிதத் தன்மையுடன் நடத்துவதற்கான பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆயின், அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற இருபெரும் சனநாயக நாடுகள் இந்த கொன்வென்ஸன்களில் கையொப்பமிடவில்லை. எனவெ அதன் நடைமுறைவெறும்பேச்சளவிலேயே உள்ளது. மேலும் சீஐஏயின் திட்டமிட்ட செயலான கைதிகளை பிறநாடகளுக்கு ரகசியமாகக் கடத்திச்சென்று சித்திரவதைக்குட்படுத்தும் நிலைமையை பெரிதும் மோசமான நிலைக்கு கொண்டு செல்கின்றது.

## நிறைவுரை

கைதிகள் சித்திரவதை செய்யப்படுவதற்காக நாடுகடத்தப்பட்டு கொண்டு செல்வது குறித்து சமீபகாலத்தில் எடுத்த ஒரு கருத்துக் கணிப்பின்படி இத்தாலி, ஸ்பெயின், கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், மெக்ஸிக்கோ, அமெரிக்கா மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளில் 20-25 வீதமான நபர்கள் சில சமயங்களில் சித்திரவதை செய்யப்படலாம் என்றும், 20 வீதம் நபர்கள் பலசமயம் இவ்வாறான சித்திரவதையை ஆதரிக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளனர் என்ற செய்தி, மனித உரிமை குறித்த பார்வை மக்களிடையே எந்தளவு சீரழிந்த நிலையில் காணப்படுகின்றது என வெளிப்படுத்துகின்றது. இந்த நபர்கள் சித்திரவதைக்காக CIA கைதிகளைத் தமது நாட்டைநோக்கிக் கொண்டுவரும் முறையை எதிர்க்கின்றனர். அமெரிக்க செனட் சபையில் சித்திரவதையை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது என மசோதா ஒன்று மெக்கைன் என்ற வியட்நாமிய போரில் பங்கேற்ற வீரர் ஒருவர் கொண்டுவந்த மசோதா பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இங்கிலாந்து நாட்டில் சில நீதிமன்றங்கள்ளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் பயங்கரவாதி எனற பெயரில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்படுவதற்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்டது. அமெரிக்க CIA நிறுவனம், கைதிகளை பிறநாடுகளுக்குக் கடத்திச்சென்ற சித்திரவதை செய்யும் முறையை எதிர்த்த அமெரிக்க மனித உரிமை அமைப்பான அமெரிக்க சிவில் உரிமைக்கழகம் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்தள்ளது. இத்தகைய பல்வேறு குரல்கள் மனித உரிமை அமைப்புகளின் தொடர்ந்த மனித உரிமை மீறலுக்கு எதிரான போராட்டத்தையும், மக்களை மனித உரிமை குறித்த உணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டைக் குறித்தும் வெளிப்படுத்துகின்றது. எனவே. அரசு வன்முறைக்க எதிரான மனித உரமை சார்ந்த பார்வையும், அதற்கான போராட்டங்கள் மட்டுமே மக்களின் உரிமைகளை நிறுவிட உதவும். ☑

### கைதிகளின் சட்ட விரோத நாடுகடத்தல்

சிஐஏ உடன் சேர்ந்து சட்டவிரோத நாடுகடத்தலில் ஈடுபட்ட நாடுகள்: பிரித்தானியா, சுவீடன், இத்தாலி, பொஸ்னியா, மெசடோனியா, துருக்கி

சந்தேகத்திற்குரிய சிஐஏ சிறைக்கூடங்கள் இருக்கும் நாடுகள்: போலந்து, ருமேனியா

இந்நடவடிக்கையில் தொடர்புடைய நாடுகள்: ஸ்பெயின், ஜேர்மனி, சைப்பிரஸ்

சட்ட விரோத நாடுகடத்தலில் ஈடுபட்ட சிஐஏ ஜெட் விமானங்கள் தங்கிச் சென்ற நாடுகள்: அயர்லாந்து, போர்த்துக்கல், கிறீஸ்

தற்கொலை: குவான்டனமோ பேயில் எவ்வித குற்றச்சாட்டுகளும் பதியப்படாது கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்ட மூவர் யூன் 10, 2006ல் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தற்சமயம் அமெரிக்காவின் இக்கொடிய வதைமுகாமில் 460 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை அங்கு 41 தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றுள்ளது. இவ்வதை முகாம் மூடப்பட வேண்டுமென சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் வேண்டுகோள்களை விடுத்துள்ளன.

Conveyancing

(Residential & Commercial)

Matrimonial

Immigration

Landlord & Tenants

Legal Aid work Undertaken

rasiahlaw@aol.com

Tel : 020 8543 4040

Fax : 020 8543 2400

180A Merton High St,

South Wimbledon

London SW19 1AY

DX : 300004 Wimbledon South

RASIAH & CO

SOLICITORS





# பெண் விடுதலையின் யதார்த்தம்

அன்புள்ள தோழி,

புகலிடச் சூழல் மற்றெல்லா உறவுகளையும் பிரித்தெடுத்தது போல உன்னையும் என்னையும் தொடர்பற்றவர்களாக்கி இருந்தது என்பது என்னவோ உண்மைதான். இருப்பினும் நாம் வாழும் சூழல் பல நெருக்கடிகளையும் தனிப்பட்ட பொறுப்புக்களையும் எமக்குத் தந்தாலும் எமது எண்ணங்கள் நீறுபூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருந்தது என்பதே சரியாகும். ஒரே திசையிற் பயணிக்கும் எமது எண்ணங்கள் சட்டென்று உன்னையும் என்னையும் அடையாளம் காணவும் இழந்த உறவைப் புதுப்பிக்கவும் வழிசமைத்துள்ளது. எனக்கும் உனக்குமான தொடர்பு வழமையான ஒன்றாக இல்லாமல் நமது சமூக நிலைமைகளின் ஊடான தேடல்களால், கருத்து-விவாதம் என்பவற்றால் கிடைத்ததையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன். நீகுறிப்பிட்டது போன்று புகலிடச் சூழலில் தம்மை மட்டும் வளப்படுத்திக்கொண்டு வாழ்பவர்களிடையே உன்னைப்போல் ஒரு தோழியைப் பெறுவது அசாத்தியம். இருப்பினும் அவர்களை விட சமூகத்தின் மீதான அக்கறையால் இந்தப் புலம்பெயர் வாழ்வில் அலைந்து கொண்டு திரிவோரும் அதிகமுள்ளனர். அவர்களுடனான தொடர்புகளை எதிர்காலத்தில் பலப்படுத்த வேண்டும். அதைவிட சமூகத்தில் உள்ள ஏனைய பிரிவினரிடையேயும் சமூகம் பற்றிய சிந்தனையைத் தூண்டவும் அக்கறையை வளர்க்கவும் நாம் முயல வேண்டும்.

புகலிடச் சூழல் நமது தேசத்து வாழ்க்கை முறைகளில் இருந்து விலகி, சமூக, பண்பாட்டு, குடும்ப, அரசியல் சூழ்நிலைகளில் முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. சில இடங்களில் அது ஒத்துப் போவதாகவும் நாமும் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களாகவும் உள்ளது. நம்மவர்களால் மிகைப்படுத்தப்பட்ட விடயங்களும் இங்கே இல்லாமல் இல்லை.

தோழி, உதாரணமாக பெண்களின் சுதந்திரம் பற்றி இங்கு நம்மவர்களால் பார்க்கப்படுவனவற்றைக் கூறலாம். இந்த நிலைமைகளில் இருந்து நாம் மேம்பட்ட வாழ்வை வெற்றிகொள்ள வேண்டுமாயின் சரியானவற்றையும், தவறானவற்றையும் தெளிந்து அறியக்கூடிய ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதுவே எம்மை உரிய திசைவழியிற் செலுத்தும்.

புலம்பெயர்ந்துள்ள சூழலில் குறிப்பாக நமது பெண்களை எடுத்துக்கொண்டால் பெரும்பகுதியானோர் திருமணத்தின் பொருட்டே இங்கு வந்தவர்களாவர். மிகக்குறைந்த தொகையினரே எமது தேசத்தின் அரசியலில் பங்குபற்றியவர்களாகவும், இங்கு அரசியற் காரணங்களுக்காய் புலம்பெயர்ந்தவர்களாகவும் உள்ளனர். இதன்படி பார்த்தால் பெரும்பகுதிப் பெண்கள் குடும்பத்துக்காக வாழ்பவர்களாகவும் தமது வாழ்வை மரபுரீதியான சிந்தனைப் போக்கோடு எந்தக் கேள்வியும் இன்றி ஏற்றவர்களாயும் உள்ளனர். மேம்போக்காகப் பார்த்தால் புலம்பெயர்ந்த பெண்கள் சமையல், குழந்தைகள், வீட்டுப் பராமரிப்பு இவற்றோடு தொலைக்காட்சித் தொடர்கள், திருமண, பிறந்தநாள், பண்டிகைக் கொண்டாட்டங்கள் என்று கலர்புல்லாக வாழ்வதாகத் தான் தெரியும்.

ஆனால்குடும்பத்தில் அதிகளவு உழைப்பில் ஈடுபடுபவர்களாகவும் நாட்டின் யுத்த நெருக்கடிகளால் தமது உறவினர்களுக்கு வரும் நெருக்கடிகளுக்கு உதவிடப் பங்களிப்புச் செய்பவர்களாகவும் உள்ளனர். இந்தப் பெண்கள் தாமாக விரும்பி வேலைகளை நிறுத்திவிட்டு ஒரு இடத்தில் உட்காராத வரையும் ஓய்வு அவர்களை அடைவதில்லை. இந்தப் பெண்கள்

நோய்வாய்ப்படும் காலங்களிலும், பிரசவ காலங்களிலும் அரைகுறையான கவனிப்பும், உதவியும் பெறக்கூடியவர்களாகவே உள்ளனர். சிலருக்கு அதுகூட இல்லை. உதாரணமாக, குழந்தைப் பேற்றுக்காக மருத்துவமனை செல்லும் தாய் 2, 3 நாட்களுக்குத் தேவையான உணவைச் சமைத்து வைத்துவிட்டுப் போகும் சூழ்நிலையே நிலவுகின்றது. வீட்டுவேலைகளின் அதிக சுமையால் தனது குழந்தைக்கு நிதானமாகத் தாய்ப்பால் கொடுக்கமுடியாமல் அதை நிறுத்திய அம்மாக்களும் இங்கே உள்ளனர்.

இந்தப் பெண்கள் சந்திக்கும் துயரங்களும் அவமானங்களும் வெளியுலகை அடைவதில்லை. ஏனென்றால் பெண் என்பவள் எல்லாவற்றையும் சகிக்கவேண்டும் என்றும் அவள் பொறுத்துப் போவது தான் எல்லோருக்கும், எல்லாவற்றுக்கும் நல்லது என்றும் மூளைச் சலவை செய்யப்பட்டு உள்ளாள். ஆணாதிக்கமும் சுரண்டலும் இயங்கும் இந்தச் சமூக அமைப்பில் பெண்ணின் உழைப்பு இலவசமாகக் கிடைக்கக்கூடியதாக பலவிதமான கருத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளன. பெண்களே இங்கு தனது உழைப்பின் பெறுமதியை உணராத நிலையிலேயே உள்ளனர்.

வீட்டிலுள்ள ஆணும் அவள் மூன்று வேளை உணவுண்டு, உறங்கி, தொலைக்காட்சி பார்த்து மகிழ்ந்து நேரத்தை வாழ்க்கையை மிகவும் சந்தோஷமாக அனுபவிப்பதாகவே சிந்திக்கின்றவாறு பழக்கப்படுத்தப்பட்டு ள்ளான். வேலையிலிருந்து திரும்பும்போது தனக்குக் கிடைக்கும் உணவு, வீட்டின் சுத்தம், குழந்தைகளின் குதூகலம் எவ்வாறு கிடைக்கின்றது என்பதைக் கவனிப்பதிலலை. மாறாக வேலைச் சுமைகளால் பெண் குமுறி வெடிக்கும்போது அங்கே பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன.

வருமானம் ஈட்டித்தரும் ஆண் தானே மிகுந்த சிரமப்படுவதாகவும், தியாகங்கள் செய்வதாகவும் எண்ணி, பெண் வீட்டில் சும்மா தானே இருக்கிறாள் என்று கூச்சிலிடுகின்றான். பதிலுக்குப் பெண்ணோ ஆண் கொண்டுவரும் சம்பளத்தின் பற்றாக்குறையினையும் தான் செய்யும் வேலைகளையும் பட்டியல் போடுவாள். குடும்ப வாழ்க்கை நாய்கடி, பூனைகடியாக நரகத்தில் உழன்று செல்லும். ஆணினதும் பெண்ணினதும் உழைப்பை நேரடியாகவும் மறைமுகமாகவும் சுரண்டுபவன் இந்தச் சந்தடியில் மறக்கப்பட்டுவிடுவான். திரும்பவும் மிருகங்களைப் போல் வாழ்வதற்குத் திரும்பிச் செல்வதுதான் விடுதலை என்று சொல்லப் பார்க்கிறார்கள். மேலும் பெண் மொழி என்று ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பெண் மொழி என்றால் பெண் பேசும் மொழியா? பிள்ளைமொழி, கிளிமொழி என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இதென்ன பெண்மொழி? ஏற்கெனவே இலக்கியங்களிலும் சினிமாவிலும் பெண்களைப் பற்றியுள்ள தூஷணைகள் போதாதா? பெண்ணின் உடலை பெண்களே வர்ணித்து எழுதுவது என்பது வெறும் பரபரப்பிற்குத் தம்மை உட்படுத்தி மற்றவர்களைத் திரும்பிப் பார்க்க வைப்பதற்கேயாகும். பெண்ணைப் பற்றிய சமூகத்தின் கருத்துக்களை மாற்றுவதற்குரிய அடிப்படைகளை நீக்கும்போது இந்த நிலைமை மாறிவிடும்.

பிறரின் உழைப்பைச் சுரண்டிவாழும் இந்தச் சமுதாய அமைப்புக்குள் உள்ள முரண்பாடுகள் சுரண்டல் என்னும் கொடுமை ஒழியும் போதுதான் இல்லாமல் போகும். ஒரு பெண் தான் செய்யும் வேலைகளுக்கான கூலியைக் கேட்கத் தொடங்கினால் இந்த உலகம் தலைகீழாகும். தனது வேலைகளுக்காக அவள் சம்பளப் பட்டியலைத் தயாரிக்கத் தொடங்கினால் சுரண்டிப் பதுக்கவென மூலதனத்தைக் கைப்பற்றி வைத்துள்ளவர்களுக்கு எங்கிருந்து பணம் மீதமாகும்? இலவசமாகப் பெண்ணின் உழைப்பைத் தந்திரமாகப் பெறுவதோடு உயிர்வாழ மட்டும் அளவான கூலியை ஆணுக்குக் கொடுத்து அவனையும் சுரண்டும் முதலாளிகளே இந்தச் சமூக அவலங்களின் சூத்திரதாரிகள்.

மூலதனம் அவர்களில் இருந்து பிடுங்கப்படவும், மக்களிடம் அது பகிர்ந்தளிக்கப்படவும் கூடிய நிலைமை வருமானால் மனித வாழ்வில் நாகரீகம் மேலும் மேலும் செழுமையடையும். இலாபம் ஈட்டுவதிலும் பதுக்குவதற்கான தேவையும் அதிகாரமும் இல்லாத நிலையில் பெண்ணும் நுகர்வுப் பொருளாகக் காட்டப்படத் தேவையற்றவளாவாள். எந்த இடத்திலும் அவள் உடல் முதன்மைப்படுத்தப்பட மாட்டாது. யாரிலும் தங்கியிராத சுதந்திரமான மதிப்புக்குரியவளான சக மனிஷியாக அவள் இருக்கையில் யாரும் அவள்மீது அடக்குமுறை பிரயோகிக்கத்

தேவையில்லாமல் போகும்.

நமது சமூகத்தில் எவ்வாறு இதைக் கொண்டுவரமுடியும் என்பது நீ அறிந்ததே. ஏற்கெனவே நமது தேசத்தில் தொடங்கப்பட்ட போராட்டத்துடன் வரித்துக் கொள்ளப்பட்ட இலக்குகளில் பெண்ணின் விடுதலையும் அடங்குகின்றது. எமது முழுக் கவனமும் உழைப்பும் தேவைப்படும் தேசியப் போராட்டத்தின் அரசியல் கள நிலைமைகளோடு ஒருகணமேனும் விலகியிருக்காதே. ஏனெனில் இங்கேதான் பெண்கள் தமது உரிமைகளுக்கான போராட்டத்தை மிகக் கவனத்துடனும் விழிப்புடனும் நகர்த்திச் செல்லவேண்டும். மண் விடுதலையின் பின் பெண் விடுதலை என்று சொல்லிக் கடைசியில் பெண்களை மறுபடியும் அடுப்பு மூட்டிக் கஞ்சி காய்ச்சப் பணிக்கும் அபாயம் எப்போதும் உண்டு.

இடையறாது சமூகத்தின்மீது அக்கறை காட்டும் எனது தோழியே,

அங்கு உயர்வான விஷயங்களும் உதவாத விஷயங்களும் கலந்து இருப்பதை நீ அறிவாய். மனிதருக்கு உயர்வுதரும் கருத்துகளை இனங்கண்டு மேலும் மேலும் வளர்த்தெடுக்கவே நாம் முயலவேண்டும். சமூக அக்கறை உடையோரையும் விடயங்களைத் தெரிந்துகொள்ளும் ஆர்வமுடையவர்களையும் ஓடி ஒழிக்கும் படியாக நம் செயல்களும் கருத்துக்களும் அமையக்கூடாது. மக்கள் எப்போதும் உயர்ந்த நாகரீகத்தை வாழ்க்கை முறைகளை நேசிப்பவர்கள். அதைக் கடைப்பிடிக்க விரும்புபவர்கள். நாம் இன்று நினைப்பதல்ல நாகரீகம், கலாச்சாரம், பண்பாடு என்பவை. அவர்களிடமிருந்தே நாம் அவற்றை முதலில் கற்கவேண்டும். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனப் புறப்பட்டால் அது எம்மை அவர்களிடம் இருந்து அந்நியப்படுத்துவதுடன் எதிர்ப்புக்களையும் பெற்றுத்தரும். நாம் மக்கள் மீது நேசமுடையோர் எனில் எம்மை அவர்களில் ஒருவராக ஏற்கும் சூழலை முதலில் உருவாக்க வேண்டும்.

ஆகவே தோழியே, சமூகத்தைப் பற்றிய அக்கறையுடையவர்கள் முதலில் சமூகத்திடம் செல்லவேண்டும் என்பதை நீ மறுக்கமாட்டாய். இந்தச் சந்தர்ப்பத்தில் முன்னர் படிக்கக் கிடைத்த சேகுவேராவின் வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன.

"நாம் மக்களிடம் போய், இதோ பாருங்கள்! நாங்கள் வந்துள்ளோம். எங்களை முன்நிறுத்தி (டிக்கற் போட்டு செலவு பண்ணி கஷ்டப்பட்டு தூரத்திலிருந்து) உங்களுக்கு தர்மம் செய்ய வந்திருக்கிறோம். உங்களுக்கு எங்கள் அறிவியலை (உலகமயமாக்கம், மார்க்கியம், பெண்ணியம்) கற்பிக்க வந்துள்ளோம். உங்கள் தவறுகளை (பொட்டு வைக்காதீர்கள், சேலைகட்டுகிறீர்கள், சேச்சே பிள்ளை வளர்ப்பதைப் பற்றி என்ன கதை) அறியாமையை உங்களுக்குச் சுட்டிக்காட்ட வந்துள்ளோம் " என்றெல்லாம் பேசக்கூடாது. மாறாகத் திறந்த மனதுடனும் எளிமையான அணுகுமுறையுடனும் அந்த மக்களிடம் (பெண்ணிடம்) இருக்கும் விசாலமான அறிவைக் கற்றுக்கொள்ள அங்கு போகவேண்டும். ☑

**விஜி**
**லண்டன்**

## பத்மநாபாவிற்கு அஞ்சலி

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் படுகொலை செய்யப்பட்ட தலைவர் நாபாவிற்கு அவ்வமைப்பினர் யூன் 24ல் அஞ்சலிக் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். இக்கூட்டத்தில் லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து நூறுபேர் வரை கலந்து கொண்டனர். தமிழ் சமூகத்தின் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகம், மனித உரிமைக்காகவும், சகோதரத்துவத்துக்காகவும், சர்வதேச நட்புறவுக்காகவும் நாபா போராடியதாக அனைவரும் நினைவு கூர்ந்தனர். இதையொட்டி ஈபிஆர்எல்எப் வெளியிட்ட அஞ்சலி அறிக்கையில் "1986இல் மாற்று அரசியல் இயக்கங்களை புலிகள் தடை செய்தார்கள். 20 ஆண்டுகளின் பின் தற்போது உலகம் அவர்களை தடை செய்துவிட்டது. புலிகளின் ஜனநாயக விரோத சகிப்புத்தன்மையற்ற செயல்பாடுகளின் உச்ச விளைவாகவே இது நிகழ்ந்துள்ளது." எனத் தெரிவித்துள்ளனர்.



# இலங்கையில் சமாதான செயற்பாடுகளின் எதிர்காலம்

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தி பரிசீலிப்பதற்கு பல அரசியல் வடிவங்கள் உள்ளன. ஆனால் உண்மையான சமாதானத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை இலங்கை அரசிடமோ விடுதலைப்புலிகளிடமோ இல்லை என 'இலங்கையில் சமாதான செயற்பாடுகளின் எதிர்காலம்' என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்துப்பகிர்வில் தெரிவிக்கப்பட்டது. தமிழ் ரைம்ஸ் ஆசிரியர் ராஜநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு யூலை 1ல் School of Oriental and African Studies - SOASல் இடம்பெற்றது. Sri Lanka Democracy Forumம் Centre for South Asian Studies (SOAS)ம் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

International support for the peace process, the future challenges என்ற தலைப்பில் SOAS பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஜொனதன் குட்ஹான்ட் பேசினார். சர்வதேச நாடுகள் இலங்கையில் சமாதானத்தை கொண்டு வருவதன் மூலம் எவ்வாறு தங்களது நலன்களை நிறைவேற்ற முடியும் என்பதிலேயே கவனம் செலுத்தின என்று குறிப்பிட்ட ஜொனதன் குட்ஹான்ட் அதனால் அவர்கள் கூட்டாக இணைந்து இலங்கையின் சமாதானச் செயற்பாடுகளை வெற்றிகரமாக நகர்த்த தவறிவிட்டனர் என்றார். அவர் சர்வதேச உறுப்பினர்கள் சம்மந்தப்படும் போது உள்ள பிரச்சனைகளை சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் பெரும்பாலான சமாதான செயற்பாடுகளுடன் கூடவே உச்ச மான வன்முறைகளும் வெளிப்படுவதை சுட்டிக் காட்டினார். தற்போது வந்துள்ள ஐரோப்பியத்தடை பற்றிக் குறிப்பிட்ட அவர் தற்போது நோர்வே மட்டுமே சமாதானச் செயற்பாடுகளில் தனித்து விடப்பட்டுள்ளது. இந்நிலை இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவத்தை கொடுத்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

Devolution and the East - political and structural complexity என்ற தலைப்பில் கல்வியியலாளரும் அரசியல் ஆர்வலருமான ரோகினி உரையாற்றினார். அவர் இந்திய அரசியல் வடிவத்தில் உள்ள நன்மைகளையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டினார். சமாதானம் என்பது யுத்தம் இல்லா சூழல் அல்ல என்று குறிப்பிட்ட அவர் இலங்கையில் இரு மொழிகளே இருப்பதால் அது சிக்கலற்றது என்றும் மத்தியில் அதிகாரங்களை வைத்திருப்பதும் மாநிலங்களைக் கலைக்கின்ற அதிகாரமும் இந்திய அரசியல் அமைப்பின் குறைபாடான அம்சங்கள் எனச் சுட்டிக்காட்டினார்.

The srilankan context : state and civil society என்ற தலைப்பில் கிழக்கிலங்கை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தங்கராஜா உரையாற்றுகையில் 70, 80, 90க்களில் தமிழ் தேசியவாதிகள் ஐக்கியப்பட்டு இருந்ததாக கூறினாலும் உண்மையில் அப்படி இருக்கவில்லை என்றும் கடந்த 20 ஆண்டுகால யுத்தம் தமிழ் தேசியத்தின் நிபந்தனையை மாற்றியுள்ளது என்றும் குறிப்பிட்டார். சமூக பொருளாதார அரசியல் முரண்பாடுகள் வன்முறையில் அடிபட்டுப் போனது என்றும் சமாதான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதும் இவை எல்லாம் வெளிப்பட்டன என்றும் துணைவேந்தர் தங்கராஜா தெரிவித்தார்.

வி.புலிகள் இராணுவ அமைப்பாக கட்டியமைக் கப்பட்டதால் அவர்களுக்கு அரசியல் ரீதியில் இந்த இனப்பிரச்சனையை கையாள்வது என்பது அவர்களது ஆளுமைக்கு அப்பாற்பட்டது என்று குறிப்பிட்ட துணைவேந்தர் தங்கராஜா தங்களது அரசியலை விரிவுபடுத்தினால் மட்டுமே வி.புலிகளால் இதனைச் செய்ய முடியும் என்று குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இவ்வாறான உள்ளடக்கத்தில் வி.புலிகள் இராணுவத் தெரிவையே விரும்புவார்கள் என்றும் கருணாவின் பிரிவும் அதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார். வி.புலிகள் தங்களைப் பலப்படுத்த பாதுகாப்பின்மையை தூண்டுவது அவசியமாகும் என்பதையும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

இவ்வுரைகளைத் தொடர்ந்து பார்வையாளர்கள் தம் கருத்துக்களை வெளியிட்டனர். கேள்விகளும் தொடுக்கப்பட்டது. சர்வதேச சமூகம் தனது நலன்களுக்கு அமைய இலங்கையை குறித்த ஒரு ஸ்தானத்தில் வைத்திருக்கும். அவர்களுடைய நலன்கள் இலங்கையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லாவிட்டால் அவர்கள் ஈடுபாடு காட்ட விரும்பமாட்டார்கள் என கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜொனதன் தெரிவித்தார்.

### அங்கு வெளியிடப்பட்ட சில கருத்துக்கள்:

வி.புலிகளின் அரசியல் திட்டத்திற்கு வேறு எந்த அரசியல் வடிவமும் பொருந்தாது.

(தொடர்ச்சி 36ம் பக்கத்தில்)




# சோமவன்ச அமரசிங்க

*தேசம்: இலங்கையில் வாழும் சிறுபான்மையினங்கள் குறிப்பாக தமிழர்கள் ஜேவிபி மீது நம்பிகை கொள்ளவில்லை. அவர்கள் சிவப்பு கொடியில் மறைந்திருக்கும் சிங்கள இனவாதிகளாகவே ஜேவிபி யை பார்க்கின்றனர். நீங்கள் எப்படி உங்கள் கட்சியை விபரிப்பீர்கள்?*

சோ. அ: முதலாவதாக இனவாதம் என்பதன் விளக்கத்தை புரிந்துகொள்ள வேண்டும். இனவாதம் என்பது மற்றையவர்களை வெறுப்பது. நாங்கள் எல்லா சமூகத்தினதும் சமத்துவத்திற்கும் ஜனநாயகத்திற்குமாக நிற்கின்றோம். எங்களை கொள்கை ரீதியாக விமர்சிக்க முடியாதவர்கள் தான் எங்களை இனவாதிகள் என்று கூறுகிறார்கள். எங்கள் கொள்கை சோசலிசம். யாராவது எங்கள் திட்டத்தில் எங்கள் பேச்சில் இனவாதம் இருப்பதை காட்டினால் நாங்கள் இலங்கையில் அரசியல் செய்வதை கைவிடுகிறோம்.

நாங்கள் ஒன்றல்ல இருதரம் ஆயுதம் தூக்கி இருந்தோம். ஆனால் எந்த ஒரு தமிழரோ வேறு இனத்தவரோ எங்களால் துன்புத்தப்படவில்லை. நாங்கள் எப்போதும் இனவாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, வளர்க் கவில்லை, ஊக்குவிக்கவில்லை. 1983ல் யுஎன்பி காடையர்களால் தமிழர்கள் தாக்கப்பட்ட போது நாங்கள் அவர்களை காப்பாற்றினோம். எங்கள் வீடுகளில் தமிழர்களுக்கு பாதுகாப்பு

ஜேவிவி 1965 மே 14ல் ஆரம்பிக்கப்பட்டது. 1971 ஏப்ரல் மாதம் ஜேவிபி தோல்வி அடைந்த ஆயுதக் கிளர்ச்சியை நடத்தியது. இதன் போது 10,000 இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 20,000 பேர் தடுத்து வைக்கப்பட்டனர். இயக்கம் தடை செய்யப்பட்டது. 1976ல் தடை நீக்கப்பட்டு ஜேவிபி பிரதான அரசியல் நீரோட்டத்தில் இறங்கியது. 1983 யூலையில் ஜேவிபி மீண்டும் தடை செய்யப்பட்டது. அவர்கள் மற்றுமொரு ஆயுதக் கிளர்ச்சிக்கு தயாராகினர். ஜேவிபியின் தலைவர் றோகன விஜயவீர கைது செய்யப்பட்டு 1989 நவம்பர் 13ல் படுகொலை செய்யப்பட்டார். ஜேவிபி யின் ஏனைய அரசியல் குழு உறுப்பினர்களும் படுகொலை செய்யப்பட்டனர். உயிர் தப்பிய ஒரே அரசியல் குழு உறுப்பினர் இன்றைய ஜேவிபி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க பிரான்ஸிலும் பிரித்தானியாவிலும் இருந்து கட்சியை மீண்டும் கட்டமைத்தார். 1994ல் ஜேவிபி யின் மீதான தடை நீக்கப்பட்டு ஜேவிபி மீண்டும் பிரதான அரசியலில் குதித்தது. 1994, 2000, 2001, 2004 தேர்தல்களில் முறையே 01, 10, 16, 39 ஆசனங்களை ஜேவிபி வென்றெடுத்தது இலங்கையின் மூன்றாவது பெரும் அரசியல் சக்தியாக உள்ளது.

கொடுத்ததற்காக யுஎன்பி காடையர்கள் எங்களை கொலை செய்ய முயற்சித்தனர்.

ஜேவிபி இனவாதிகள் என்ற குற்றச்சாட்டு முற்று முழுதான பொய்.

*தேசம்: ஆரம்பகாலத்தில் ஜேவிபி மலையகமக்களை இந்திய ஆக்கிரமிப்பாளர்களாக பார்த்தனர். அவர்களது 5 அடிப்படை அரசியல் விரிவுரைகளில் மலையக மக்களுக்கு எதிரான விரிவுரை ஒன்றும் இடம்பெற்றுள்ளது. இன்றும் ஜேவிபி இக்கொள்கையைக் கொண்டுள்ளதா ?*

சோ. அ: இல்லை. நிச்சயமாக இல்லை. எங்களால் இந்தப் பொய்களை வீழ்த்த முடியாமல் போய்விட்டது. மலையகத்தில் பிரஜாவுரிமைப் பிரச்சினையுள்ளது. அதில் எங்கள் கட்சியின் கொள்கை என்னவென்றால் யார் இலங்கையில் வாழ விரும்புகிறார்களோ அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும். யார் இந்தியாவுக்குச் செல்ல விரும்புகிறார்களோ அவர்கள் இந்தியா செல்வதற்கான ஆவணங்களை வழங்கி அவர்கள் அங்கு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். யாரும் இலங்கையில் தங்குவதற்கோ, இந்தியா செல்லவோ நிர்ப்பந்திக்கப்படக் கூடாது.

*தேசம்: காலத்திற்குக் காலம் ஜேவிபி மாற்றமடைந்து கொண்டு வருகிறது. அவர்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளை எடுத்துள்ளனர். பாராளுமன்ற அரசியல், இந்தியா பற்றிய நிலைப்பாடு ......*

சோ. அ: நிச்சயமாக ஆரம்பத்தில் நாங்கள் பாராளுமன்ற அரசியலை நிராகரித்தோம். ஜேவிபி ஆரம்பிக்கப்பட்ட மிக ஆரம்ப காலங்களில் இடதுசாரி கட்சிகள் பாராளுமன்ற அரசியலைவிட எதையும் செய்யவில்லை. அவர்கள் முதலாளித்துவத்தின் கீழ் இருந்து கொண்டு முதலாளித்துவத்திற்கு சேவையாற்றினார்கள். நாங்கள் அதனை மாற்ற முற்பட்டோம்.

மிக ஆரம்ப நாட்களில் நாங்கள் இது பற்றி கலந்துரையாடினோம். ஐந்து கலந்துரையாடல்களை நடத்தினோம். அப்போது ஆளும் வர்க்கம் எங்களைத் தாக்கும் என்றும் எங்களுக்கு ஜனநாயகத்தை மறுக்கும் என்றும் தெரிந்திருந்தோம். தொழிலாளர்கள் அரசியல் கட்சியை முன்னெடுக்கும் ஒரு கட்டத்தில் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதை மிக ஆரம்ப காலத்திலேயே குறிப்பிட்டிருந்தோம்.

எங்களுக்கு ஜனநாயகம் மறுக்கப்பட்டது. எதிரி ஆளும் வர்க்கம் எங்களை அழிக்க முற்படும் போது ஒரு கட்டத்தில் நாங்கள் மாற்று வழியை கையாண்டோம். இதன் காரணமாக பாராளுமன்ற அரசியலை பொறுத்தவரை நாங்கள் சற்று தீவிர இடதுசாரி நிலையை எடுத்தோம்.

1977ல்பாராளுமன்றஅரசியலை முற்றுமுழுதாக நிராகரித்து தீவிர இடதுசாரி நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டது நாங்கள் விட்ட தவறு. பாராளுமன்றத்தையும் பயன்படுத்தியிருக்க முடியும். ஒரு சோசலிஸக் கட்சி பாராளுமன்றத்தில் செய்வதற்கும் ஒரு வேலையுண்டு. மக்களுக்கு அறிவூட்டும் சேவையை செய்ய முடியும்.

*தேசம்: நீங்கள் இப்போது பாராளுமன்றத்தினூடாக சோசலிசத்தை நிறுவ முடியும் என நம்புகிறீர்களா ?*

சோ. அ: இல்லை. பாராளுமன்றம் ஆளும் வர்க்கத்திற்கான நிறுவனம். நாங்கள் என்ன நினைக்கிறோம் என்றால் ஒரு கட்டத்தில் பாராளுமன்றத்தில் இவர்களை தோல்வியடையச் செய்ய முடிந்தால் சரி. ஆனால் நாங்கள் இதுவரை எந்த ஒரு நாடும் பாராளுமன்றத்தினூடாக சோசலிசத்தை அடைந்ததைக் காணவில்லை. ஆனால் எப்படியோ நாங்கள் இடதுசாரி இயக்கத்தை நம்புகிறோம். இதற்கு (சோசலிசத்தை பாராளுமன்றத்தினூடாக நிறுவ) வழியிருந்தால் மிக்க நல்லது.

*தேசம்: இதற்கு (சோசலிசத்தை பாராளுமன்றத்தினூடாக நிறுவ) வழியிருக்கும் என நினைக்கிறீர்களா ?*

சோ. அ: எங்களுக்குத் தெரியவில்லை. மக்களுக்கு அறிவூட்ட வேண்டும். ஒரு கட்டத்தில் முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர் வர்க்கத்தை புரிந்து கொள்ள முயற்சிக்கும். எப்படி இருப்பினும் நாங்கள் அமைப்புரீதியாக ஒழுங்குபட்டு எங்களைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர் கட்சியை நொருக்கி விட முடியாது.

*தேசம்: இது நடைபெறப்போவதில்லை என்ற ஒரு கட்டத்தில் ஜேவிபி மீண்டும் ஆயுதத்தை தூக்குமா ?*


சோ. அ: ஆயுதத்தை தூக்குவதா இல்லையா என்பது அப்போதைய நிலவரத்தைப் பொறுத்தது. புதிய நிலைமைகள் உருவாகலாம். அதற்கான முடிவுகளை இன்றே எடுத்துவிட முடியாது. எங்களுக்கு வரலாறு தெரியும். நாங்கள் வரலாற்றைப் படிக்கிறோம். நாங்கள் எங்கள் அனுபவங்களில் இருந்தும் கற்றிருக்கிறோம் அதன்படி எதிர்காலத்தில் மாற்றங்கள் நிகழலாம்

என நினைக்கிறோம். மாற்றங்களுக்கு ஏற்ப கட்சி முடிவுகளை எடுக்கும்.

*தேசம்: இந்தியா பற்றிய உங்கள் நிலைப்பாடு ?*

சோ. அ: ஆரம்பத்தில் இலங்கை மீதான இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை இலங்கைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. சமத்துவமாக இருக்கவில்லை. இதனை நாங்கள் விமர்சித்தோம். எங்களுக்கு தெற்காசியாவில் big brother தேவையில்லை. எல்லா நாடுகளும் சமத்துவமாக இருக்க வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் தனது கொள்கையை இந்தியா இலங்கை மீது திணிக்க முற்பட்டது. இவை இந்திய உயர்ஸ்தானிகருடன் நட்புறவை ஏற்படுத்த தடையாக இருக்கவில்லை. இந்த விடயங்கள் பற்றி இந்திய உயர்ஸ்தானிகருடன் பேசினோம். பிரச்சினையை சுட்டிக்காட்டினோம். எங்கள் உறவு மிக நன்றாகவே இருந்தது.



இந்தியா ஏன் பிரிவினை வாதிகளுக்கு உதவ முடிவெடுத்தது என்பதை எங்களால் விளங்கிக் கொள்ள முடிந்தது. இலங்கையில் உள்ள சிறு பான்மையினருக்கு உதவ வேண்டும் என்று இந்தியா அதனைச் செய்யவில்லை. ஏனென்றால் 1977ல் பதவிக்கு வந்த ஜே ஆர் ஜெயவர்த்தன ஒரு அமெரிக்க ஏஜென்ட். அவர் திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்க இராணுவத்திற்கு வழங்க இருந்தார். அப்போது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க விஸ்தரிப்புக்கு எதிராக இருந்தது. அப்போது இந்திய உயர்ஸ்தானிகராக இருந்த ஜே என் டிக்ஸிற் இன் வார்த்தைகளில் சொல்வதானால் 'நாங்கள் ஜே ஆர் ஜெயவர்த்தனவிற்கு பாடம் புகட்டுகிறோம்'.

1985 – 86 காலப் பகுதியிலும் இலங்கை மீதான அந்தக் கொள்கையை நாங்கள் எதிர்ப்போம் என்றும் அது இந்தியாவுக்கு உதவாது என்றும் வேறு சிறந்த கொள்கையை ஆராயும் படியும் கூறினோம். எதிர்க் கட்சிகளை உள்ளடக்கும் அமெரிக்காவுக்கு எதிரான கொள்கையை ஆராயும் படி கேட்டோம். அதுவும் இந்தியாவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

*தேசம்: இந்தியா ஒரு பிரதேச வல்லரசு. அது தொடர்ந்தும் ஒரு big brother நிலையிலேயே செயற்படும். மேலும் தனது நலனிலேயே அக்கறை கொண்டிருக்கும்.*

சோ. அ: நிச்சயமாக. ஏற்றுக் கொள்கிறோம். தெற்காசியாவில் பல நாடுகள் இருந்த போதும் இந்தியா என்ற ஒரு அயல் நாடே உள்ளது. இந்திய தலைமைத்துவத்தை எங்கள் கட்சியும் ஏற்றுக்கொள்கிறது. இந்தியா தென்னாசிய பிராந்தியத்துக்கு தலைமைதாங்க முடியும்.

எந்த ஒரு நாடும் போல இந்தியாவும் தனது தேசிய நலனில் அக்கறையாக இருக்கும் அதனை ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரம் இந்தியா இலங்கையின் உரிமைகளையும் மதிக்க வேண்டும். உறவுகள் சமத்துவமாக இருக்க வேண்டும். இலங்கை அரசாங்கம், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும் இந்தியாவின் நலன்களை பாதுகாக்க வேண்டும். இந்தியாவை காயப்படுத்தக் கூடாது. இந்தியாவுக்கு எதிராக வேறு வல்லரசுடன் இணைந்து செயற்படக் கூடாது. இவை இலங்கையில் பதவிக்கு வரும் அரசாங்கங்களின் பொறுப்பு. கடமை.

*தேசம்: இப்போது உள்ள அதே இலங்கை இராணுவமே ஜேவிபி ஆதரவாளர்களை சித்திரவதை செய்து, பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தி, கொலைகளைச் செய்திருந்தது. தமிழர்களையும் ஏனைய சிறுபான்மையினரையும் ஒடுக்கியது. இப்போது எப்படி நீங்கள் இலங்கை இராணுவத்தில் நம்பிக்கை கொண்டிர்கள் ?*

சோ. அ: எங்கள் நிலைப்பாடு இதுதான். இது தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். இராணுவத்தில் உள்ள சிலர் சித்திரவதையிலும் கொலைகளிலும் ஈடுபட்டு உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் கொலையாளிகளாகவே வேலையில் அமர்த்தப்பட்டனர். Green Tigers, PRRA மற்றும் சில ஏஜென்டுகள் யுஎன்பி

ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் அவர்கள் இராணுவத்தால் உள்வாங்கப் பட்டனர். இப்போது அவர்கள் அங்கு இல்லை. இராணுவத்தின் கரங்கள் கறைபடியாதது என்று நாங்கள் சொல்லவில்லை. இராணுவத்தில் சில தீயசக்திகள் உள்ளனர். ஆனால் முப்படை களையும் முழுமையாகப் பார்க்கும் போது நாங்கள் இந்த நிறுவனமான இராணுவத்தை குற்றம்சாட்டவில்லை. பிரச்சினையிருக்கிறது.

ஆனால் நாங்கள் இராணுவத்துடன் இணைந்து வேலை செய்யவில்லை. இராணுவம் நாட்டின் எல்லைகளை சட்ட ஒழுங்குகளைப் பாதுகாக்க கடுமையாக உழைக்க வேண்டும். யாரையும் காயப்படுத்தவோ, மனித உரிமைகளை மீறவோ அல்ல. இதுதான் எங்கள் கட்சியின் நிலைப்பாடு. அதனால் தான் நாங்கள் இராணுவத்தின் நடவடிக்கைகளில் விழிப்பாக இருக்கிறோம்.

*தேசம்: நீங்கள் அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள்.*

சோ. அ: இல்லை. நாங்கள் அரசாங்கத்திற்குள் இல்லை. அதே சமயம் நாங்கள் அரசாங்கத்திற்கு வெளியே என்றும் சொல்ல முடியாது. நாங்கள் அரசாங்கத்தை நிபந்தனையின் அடிப்படையில் ஆதரிக்கிறோம். யுஎன்பி, அரசாங்கத்தை வீழ்த்தா மல் இருக்க ஆதரவளிக்கிறோம்.

*தேசம்: யூன் 26ல் லண்டனில் நீங்கள் பேசும்போது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் எல்லோரும் சமம் என்று கூறினீர்கள். ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் வெற்றி பெற்ற ஒவ்வொரு அரசாங்கமும் சிறுபான்மையினரை பாரபட்சமாகவே நடத்தி வந்தனர். அதனாலேயே அவர்கள் ஆயுதம் ஏந்தினர்.*

சோ. அ: ஆமாம் அதனையும் நான் எனது பேச்சில் குறிப்பிட்டிருந்தேன்.

*தேசம்: நீங்கள் உதட்டளவில் எல்லோரும் சமம் என்று சொல்வதைக் காட்டிலும் நீங்கள் உண்மையில் இதனைத் தான் கூறுகிறீர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். அந்த வகையில் இனப் பிரச்சினையில் ஜேவிபி யின் நிலைப்பாடு என்ன ?*

சோ. அ: உங்களுக்குத் தெரியும் நாங்கள் அதிகாரத்தில் இல்லையென்று. வெற்றி பெற்ற அரசாங்கங்களும் எங்களுடையது அல்ல. எங்களுடைய கொள்கைப் பிரகடனம் முதன் முதலில் 1977ல் வெளியிடப்பட்டது. அடுத்த ஆண்டுடன் 30 வருடங்களாகிறது. இலங்கையில் உள்ள மூன்று மொழிகளும் சமத்துவமாக தேசிய மொழிகளாக்கப்பட வேண்டும். அரசகரும மொழி என்ற ஒன்று இருக்க வேண்டியதில்லை. இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளில் எங்களுடைய கட்சியே முதன் முதலில் இதனை மக்கள் மத்தியில் துணிச்சலாக தெரிவித்தது.

**இலங்கை அரசாங்கம், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும் இந்தியாவின் நலன்களை பாதுகாக்க வேண்டும். இந்தியாவை காயப்படுத்தக் கூடாது. இந்தியாவுக்கு எதிராக வேறு வல்லரசுடன் இணைந்து செயற்படக் கூடாது. இவை இலங்கையில் பதவிக்கு வரும் அரசாங்கங்களின் பொறுப்பு. கடமை.**

ஒருவர் தனது கல்வியை தமிழ், சிங்களம், ஆங்கிலம் எந்த மொழியில் வேண்டுமானாலும் கற்கலாம். இந்த எந்த மொழியிலும் அரசுடன் தொடர்புகொள்ளலாம். அரச அறிவிப்புகள் அனைத்தும் மூன்று மொழியிலும் வெளிவர வேண்டும்.

இதற்கு மேல் ஒரு சிறந்த கொள்கையை யாரும் இதுவரை வெளியிடவில்லை. இதுதான் இப்போதும் எங்கள் கட்சியின் நிலைப்பாடு.

*தேசம்: இந்த மொழிக்கொள்கை எழுபதுக்களில் சிலசமயம் மிகச் சிறந்ததாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது 65,000 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். அன்றைய நிலையில் இருந்து வெகுதூரம் வந்துவிட்டோம். இலங்கையின் வட கிழக்குப் பகுதிகளுக்கான சுயாட்சி அல்லது சமஸ்டி போன்ற ஒரு தீர்வுக்கு உங்களால் உடன்பட முடியுமா ?*

சோ. அ: நாங்கள் மத்தியில் அதிகாரங்களை குவிப்பதை மிகத் தீவிரமாக எதிர்க்கிறோம். நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும். தயவு செய்து decentrlization யை நடைமுறைப்படுத்திப் பாருங்கள். நாங்கள் தமிழ் மக்களை இதனை நடைமுறைப்படுத்தி பார்க்கும் படி கேட்கிறோம். இது பற்றி ஆனந்தசங்கரி, சித்தார்த்த உட்பட பலருடன் பேசியிருக்கிறேன்.

அவர்கள் சமஸ்டியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கிறார்கள். சரி இதன் மூலம் மிக முக்கிய பிரச்சினையான மொழிப் பிரச்சினையை வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்களின் மொழிப் பிரச்சினையை சமஸ்டி ஆட்சியை அமைப்பதன் மூலம் எப்படித் தீர்ப்பது. அதிகாரப் பரவலாக்கம் மூலம், எந்தவகையிலாவது எப்படித் தீர்ப்பது. அதற்கு தீர்வில்லை. சமஸ்டி வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்களுக்கு ஒரு தீர்வல்ல.

அதனால் தான் மூன்று மொழிகளையும் தேசிய மொழிகளாக்கி நிர்வாகங்களை பரவலாக்குங்கள் என்று சொல்கிறோம்.

சமஸ்டியும், அதிகாரப் பரவலாக்கமும் எதிர் காலத்தில் புதிய பிரச்சினைகளை உருவாக்கு மேயல்லாமல் பிரச்சினையைத் தீர்க்காது. இந்தியா வில் நீர்ப் பிரச்சினையை எடுங்கள் மாநிலங்கள் மோதுகின்றன.

சிங்களவர்களோ, தமிழர்களோ, முஸ்லீம்களோ இலங்கை இலங்கையர்களுக்கே உரியது. இலங்கை அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப சரிசமமாக பங்கிடப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் மூன்று சமூகத்தையும் சேர்ந்த 12 வீதமான மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் 33 வீதமான நிலத்தைக் கேட்கிறார்கள். இது எப்படி நியாயமாக முடியும்.

இதுஎதிர்காலத்தில்பிரச்சினையாகஉருவாகும். இன்றைக்கு மொழி பிரச்சினையாக இருக்கிறது ஏனென்றால் ஆரம்பத்திலேயே நாங்கள் மூன்று மொழிகளையும் சமமாக நடத்தவில்லை. அதனால் தான் நாங்கள் சமத்துவத்திற்காக போராடுகிறோம். இதன் மூலமே எதிர்காலத்தில் பிரச்சினைகள் எழுவதை தடுக்க முடியும். சமத்துவத்திற்கு மேலாக எதையும் வழங்க முடியாது.

*தேசம்: இன்றைய நிலையில் நீங்கள் விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆக வேண்டும். வட கிழக்கு இலங்கையில் அவர்களே அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் உங்களுடைய இந்தத் தீர்வுத் திட்டத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அப்படியானால் அடுத்தது என்ன ?*

சோ. அ: அரசாங்கத்தின் கொள்கை பிரச்சி னைகளைத் தீர்க்க வேண்டும். பிரச்சினைகள் உருவாகாமல் தடுக்க வேண்டும். அதுவும் ஒரு வகையில் நல்ல பெறுபேறுதான். பிரச்சினையை மோசமாக்கக் கூடாது. நீங்கள் குறிப்பிட்டது போல் மேற்கோள்களுக்கிடையே வி.புலிகள் அதிகாரத்தை வைத்திருக்கிறார்கள் என்றே வைத்தக் கொள்வோம். துப்பாக்கி அதிகாரம். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

எங்கள் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதத்தை தூக்கியது ஏனென்றால் எங்களுக்கு ஜனநாயகம் மறுக்கப்பட்டு எக்காரணமும் இல்லாமல் எங்கள் கட்சி தடைசெய்யப்பட்டது. 1971ல் எங்கள் மீது விமர்சனம் இருந்தது. நாங்கள் தடை செய்யப்பட்டோம். ஆனால் பின் நாங்கள் எல்லா தேர்தல்களிலும் பங்கேற்று தீவிரமாக பிரதான அரசியல் நீரோட்டத்தில் இருந்தோம். அப்படி இருந்தும் நாங்கள் தடைசெய்யப்பட்டோம் ஏனென்றால் நாங்கள் பாராளுமன்றத்திற்கு வருகிறோம் என்று. இது ஜனநாயக அரசின் ஒரு நடைமுறையாக இருக்க முடியாது. வேறு வழியில்லை. அரசை மாற்றியமைக்கவும் பொது நன்மைக்காகவும் ஆயுதம் ஏந்தினோம்.

ஆனால் இப்போது வி.புலிகள் ஆயுதங்களைக் கொண்டு அதிகாரத்தை கைப்பற்ற நினைக்கிறார் கள். ஆயுதங்களைக் கொண்டு மக்களின் பெயரில் முடிவுகளை எடுக்க முடியாது. நாங்கள் மக்களால் வழங்கப்பட்ட அதிகாரத்தையே ஏற்றுக் கொள்கிறோம். வி.புலிகள் எப்படி மக்கள் தங்களுக்கு அந்த அதிகாரத்தை தந்திருப்பதை நிரூபிக்க முடியும்.

நீங்கள் நினைக்கிறீர்களா வி.புலிகள் இதனைச் செய்வார்கள் என்று. இல்லை. அவர்களது துப்பாக்கிகளின் சத்தம் ஓய்ந்தால், துப்பாக்கிகளை மக்களுக்கு எதிராக திருப்பாமல் இருந்தால் மக்கள் வி.புலிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள். அவர்கள் இதுவரை தமக்கு மக்களின் ஆதரவு இருப்பதை நிரூபிக்கவில்லை. புலிகள் மக்களின் ஆதரவை பறித்து வைத்திருக்கிறார்கள்.

*தேசம்: இலங்கையில் முழுமையான ஒரு யுத்தம் வெடிக்கும் பட்சத்தில் இலங்கை இராணுவம் வி.புலிகளை அழித்துவிடும் என்ற நம்பிக்கை ஜேவிபி மத்தியில் இருப்பதாக கூறப்படுகிறது. இன்று சில மணிநேரங்களுக்கு முன் இராணுவத்தின் முக்கிய தளபதி ஒருவர் கொல்லப்பட்டு உள்ளார். அதற்கு முன் இராணுவத்தின் தலைமைத் தளபதி சரத் பொன்சேகா மயிரிழையில் உயிர் தப்பி உள்ளார். இதற்குப் பின்னும் இலங்கை இராணுவம் வி.புலிகளை அழித்துவிடும் என்று உண்மையில் நீங்கள் கருதுகிறீர்களா ?*

சோ. அ: நாங்கள் அப்படி கருதவில்லை. நாங்கள் ஒரு போதும் இறுதித் தீர்வு இராணுவ ரீதியில் இருக்கும் எனக் கூறவில்லை. அதே சமயம் நாங்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது, இப்போது துப்பாக்கிகள் முக்கிய பங்கு வகிக்கின்றது. வி.புலிகள் மட்டுமல்ல உலகில் எந்த இயக்கத்தையும் இராணுவ நடவடிக்கைகளால் மட்டும் தோல்வி அடையச் செய்துவிட முடியாது. அரசியல் இராணுவ நடவடிக்கைகளாக இருக்க வேண்டும்.

---

நாங்கள் சமத்துவத்திற்காக போராடுகிறோம். இதன் மூலமே எதிர்காலத்தில் பிரச்சினைகள் எழுவதை தடுக்க முடியும். சமத்துவத்திற்கு மேலாக எதையும் வழங்க முடியாது.

துப்பாக்கிகளுடன் பேச வந்தால் அரசாங்கம் துப்பாக்கிகளுடன் தான் பேசவேண்டும். அரசாங்கம் எப்போதும் பேசுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் முன் துப்பாக்கி அல்ல கலந்துரையாடல் இருக்க வேண்டும். எந்த இயக்கமாவது துப்பாக்கிகளின் பலத்தில் மட்டுமே நம்பிக்கை வைத்திருந்தால் அப்போது நிலைமை கடினமானதே. இராணுவம் மக்களை, அவர்களது உரிமைகளை பாதுகாக்க வேண்டும்.



வட கிழக்கை எடுத்தால் எதிர்தரப்பு ஆதரவாளர்கள், உறுப்பினர்கள், தலைவர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். அதனை நிறுத்துவது அரசின் கடமை. பொறுப்புள்ள அரசாங்கம் பாதுகாப்புப் படைகளிடம் அந்த பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். அவர்கள் மனித உரிமைகளை மீறுவதல்ல சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும். இதனைச் செய்வதற்கு மக்களுக்கு எதிரான துப்பாக்கிகளின் சத்தத்தை நிறுத்துவதற்கு இராணுவம் ஆயுதத்தை பயன்படுத்த வேண்டியுள்ளது.

யுத்தமும் ஒரு அரசியல். துப்பாக்கிகளுடன் அரசியல் பேசினால் அது யுத்தம். எப்போது ஒருவர் அடிப்படை விதிகளை மீறுகிறாரோ பொது மக்களின் உரிமைகள், ஜனநாயக உரிமைகள் மீறப்படுகிறதோ அது பயங்கரவாதம். பயங்கர வாதம் வீழ்த்தப்பட வேண்டும்.

*தேசம்: நான் மீண்டும் பழைய கேள்விக்கே வருகிறேன். பேச்சு வார்த்தைக்கு செல்லும் போது இரு தரப்புமே சில விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும். உங்களால் வி.புலிகளுடன் விட்டுக் கொடுப்புச் செய்ய முடியுமா ?*

சோ. அ: இப்போது வி.புலிகளுடன் பேசி தீர்வைக் காணுவது என்பது இயலாத காரியம் என்ற நிலைக்கு வந்துவிட்டோம். நான் சரியாக நினைவுபடுத்தினால் யூன் 9ல் ஒஸ்லோவில் வி.புலிகள் வெளியிட்ட அறிவிப்பின் படி, இலங்கை அரசுடன் பேச முடியாது, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஊக்கம் அதனிடம் இல்லை. இப்பிரச்சினையை பேசுவதற்கான உரிமையும் அதற்கு இல்லை. ஆகவே சுயநிர்ணய அடிப்படையில் இப்பிரச்சினைக்கு நாங்கள் தீர்வு காணப்போவதாக வி.புலிகள் தெரிவித்தனர். அதாவது பிரிவினைக்கான உரிமை. இந்நிலையில் நாங்கள் என்ன நம்புகிறோம் என்றால் பேச்சுவார்த்தையில் இருந்து தொலைவில் உள்ளோம். வி.புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்தால் நல்லது. ஆனால் இந்த அறிவிப்பை விட்டதன் மூலம் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு வரமுடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை.

எல்லா அரசியல் கட்சிகளும் இரு விடயங்களில் உடன்பட்டுள்ளன. ஒன்று வி.புலிகளுடன் பேசுவது. எங்களைப் பொறுத்தவரை வி.புலிகளுடன் மட்டுமல்ல ஜனநாயக வழியை பின்பற்றும் ஏனையவர்களுடனும் பேச வேண்டும். நாங்கள் வி.புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பது நடைமுறையில் நிரூபிக்கப்படவுமில்லை. அவர்கள் இதனை சுதந்திரமான தேர்தலில் நிரூபிப்பார்களா என்றும் எமக்குத் தெரியவில்லை. அது நிரூபிக்கப்படும் வரை பொறுப்புள்ள அரசாங்கம் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடனும், நான் தமிழ் அரசியல் கட்சி என்று குறிப்பிட விரும்பவில்லை, தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் தமிழ் மக்களில் ஒரு பிரிவினரை தனிமைப்படுத்துவதாக அமையும்.

இலங்கையில் வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது. அனைத்து அரசியல் கட்சிகளும் வடக்கு கிழக்கில் தமது அரசியல் வேலைகளைச் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். அதுவே ஜனநாயகம். உடன்பட மறுப்பதற்கு உடன்பட வேண்டும். எப்படி ஜனநாயகத்தை எற்படுத்துவது என்பது பற்றி நாங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். அதற்கான ஒரு road map இருக்க வேண்டும்.

இதன் முதல் கட்டம் வி.புலி உறுப்பினர்களை

அதிலிருந்து விலகிவரும்படி வேண்டுகோள் விடுவது. அரசாங்கம் அவர்களுக்கு பாதுகாப்பு, கல்வி, தொழிற் பயிற்சியை வழங்க வேண்டும். அவர்களுக்கு இலங்கையிலோ வெளிநாடுகளிலோ தொழில் வழங்க வேண்டும். நாங்கள் இந்த இளைஞர்களுக்காக சிங்கள இளைஞர்களின் வேலைகளையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். ஏனென்றால் எங்களுக்கு சமாதானம் வேண்டும். அவர்களை காடுகளில் இருந்து வெளியே வரச்சொல்ல வேண்டும்.

வேறு வழிகளும் உண்டு. அவையும் இந்த road mapஇல் முக்கிய இடம்பிடிக்கிறது. மற்றையது, வடக்கு கிழக்கிற்கான சமூக நலத் திட்டங்கள். வி.புலிகளின் பகுதிகளுக்குள் அரசாங்கம் செல்வது கடினமாக இருக்கும். பரவாயில்லை. அவர்கள் அங்கேயே இருக்கட்டும். இருந்தாலும் அரச அலுவலர்கள் அங்கு இருப்பார்கள். அவர்களை புலிகள் பயன்படுத்துவார்கள். அரசாங்கம் அவர்களுக்கு சம்பளம் வழங்கட்டும். அதனை நிறுத்தக் கூடாது. அப்பகுதிகளுக்கான நிதியையும் நிறுத்தாமல் வழங்க வேண்டும். அந்த மக்களுக்கு தெரியட்டும் அரசாங்கம் தங்களை கருத்தில் கொண்டுள்ளது என்று. வடக்கு கிழக்கில் நிறைய புனரமைப்பு புனர்வாழ்வு வேலைகள் மிக விரைவாகவும் வேண்டியவரை விரிவாகவும் செய்யப்பட வேண்டும்.

அரசியல் அமைப்பை பொறுத்தவரை நாங்கள் சமஸ்டி ஆட்சியை அமைப்பதா, ஒற்றையாட்சியை அமைப்பதா என்பதை கலந்துரையாடுவோம். மக்களிடம் செல்வோம். அரசியலமைப்பு மக்களுக்கானது.

*தேசம்: ஜேவிபி எந்த தீர்வுத் திட்டத்தையும் பற்றி கலந்துரையாடத் தயாரா ?*

சோ. அ: ஏனில்லை. அப்படி இல்லை என்றால் கலந்துரையாடுவதன் நோக்கம் என்ன? இந்தப் பிரச்சினைகளுக்கு எங்களிடம் தயார் செய்யப்பட்ட விடைகள் கிடையாது. யாராவது இது மட்டுமே தீர்வு என்று வந்தால் இது ready made shirt வாங்குவது போல் இருக்கும். அது பொருந்தும் என்று சொல்ல முடியாது. ready made solution இருக்க முடியாது. கலந்து பேசி ஒரு தீர்வுக்கு வரவேண்டும். அதனை அந்த மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அவர்களே முடிவானவர்கள்.

*தேசம்: தமது அன்புக்குரியவர்களை இழந்து கடந்த 25 ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தத்தில் வாழும் வடக்கு கிழக்கு மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் ?*

சோ. அ: தயவு செய்து மற்றவர்களின் பொய்யான வழிகாட்டலால் ஜேவிபி யைப் பற்றி தவறாக விளங்கிக் கொள்ளாதீர்கள். இது என்னுடைய மிக முக்கியமான விண்ணப்பம். அவர்களுக்கு எங்களது எழுத்துக்களை பார்க்கும் சந்தர்ப்பம் கிடையாது. அதனை விடுங்கள். எங்கள் நடவடிக்கைகளைப் பாருங்கள். ஒரு தமிழராவது முன் வந்து ஜேவிபி தன்னை வார்த்தைகளாலோ உடல்ரீதியாகவோ தான் ஒரு தமிழன் என்பதற்காக துன்புறுத்தினார்கள் என்று நிரூபிக்கட்டும் நாங்கள் இலங்கையில் அரசியல் செய்வதை கைவிடுகிறோம். தயவு செய்து சொல்லுங்கள். தயவு செய்து எங்களைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். தயவு செய்து எங்களை விளங்கிக் கொள்ளுங்கள்.

கடந்த 25 ஆண்டுகளாக துன்பத்தை அனுபவித்த குறிப்பாக வடக்கு கிழகு மற்றும் பகுதிகளில் யுத்தத்தால் வேதனையை அனுபவித்தவர்கள் அதில் வாழ்ந்தவர்களுக்கு நான் சொல்வது, எங்களுக்கு உங்கள் வேதனை புரியும். நாங்களும் அதை அனுபவித்தவர்கள். நாங்கள் ஒன்றாகச் சேர முடியும். நாங்கள் சமத்துவத்தை உருவாக்கி இந்நாட்டில் வாழமுடியும். நாங்கள் மற்றைய கலாச்சாரங்களை மதிக்கின்ற புதிய கலாச்சாரத்தை பின்பற்ற வேண்டும். எங்கள் கலாச்சாரம் பல்லாயிரம் ஆண்டு பழமையானது. அதனை யாரும் அழித்துவிட முடியாது. அதனைச் செய்ய யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். பல கலாச்சாரங்கள் இருக்கும் எம் நாட்டில் நாங்கள் ஒவ்வொருவரையும் மதிப்போம். இது சாத்தியமானது.

ஆயுதங்கள், வி.புலிகள், கட்சிகள், அரசாங்கம் அல்ல மக்களே முடிவானவர்கள். அவர்கள் சரியான வழியைத் தேர்ந்தெடுத்து நாட்டை கட்டி எழுப்பி நாளைய சமூகத்திற்கு வழங்க வேண்டும். எங்களிடம் நல்ல நாடு உண்டு. நாங்கள் எல்லோரும் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்கள் அதன் உரிமையாளர்கள். எதிர்கால சந்ததிக்காக இந்நாட்டை கட்டி எழுப்புவோம். ☑

( ஜேவிபி தலைவர் சோமவன்ச அமரசிங்கவுடனான இப்பிரத்தியேக பேட்டி தேசம் சஞ்சிகைக்காக லண்டனில் யூன் 26 2006ல் எடுக்கப்பட்டது. )

28ம் பக்கத் தொடர்ச்சி .....

ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காண சர்வதேச சமூகம் பின்நிற்கிறது.

வி.புலிகளும் ஜேவிபியும் ஒரே வர்க்க சமூகத்தின் ஒரே காலப்பகுதியின் விளைவு.

இலங்கை அரசாங்கமோ வி.புலிகளோ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளவில்லை. வி.புலிகளின் சுயநிர்ணய உரிமையையே அவர்கள் கேட்கிறார்களே அல்லாமல் மக்களின் சுயநிர்ணய உரிமையை அவர்கள் கேட்கவில்லை.

அரசியல் வடிவங்களும் அதிகாரப் பகிர்வும் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்க வில்லை. அவை வி.புலிகளும் அரசாங்கமும் தன்னிச்சையாக செயற்படவே உதவுகின்றது.

கருணாவும் முஸ்லீம்களும் சமாதானத்தின் குழப்பவாதிகள் என்று சொல்வது மைதானத்தில் அரசும் வி.புலிகளும் மட்டுமே ஆட நினைப்பது போல உள்ளது.

ஈழம் இரு ஆண்டுகளுக்கு முன்பே உருவாகிவிட் டது. வி.புலிகள் வடக்கு கிழக்கை ஆழ்கிறார்கள். அவர்களிடம் பொலிஸ், நீதிமன்றம் எல்லாம் உண்டு. இது வி.புலிகளின் மாயயை. அவர்களின் கட்டுப்பாட்டில் பெரும்பாலும் நிலம் உள்ளதே ஒழிய மக்கள் இல்லை. வரி மட்டுமே விதிக்கின்றனர், அரசாங்கமே சேவைகளுக்கு நிதியும் சம்பளமும் வழங்குகிறது.

வி.புலிகளின் முடிவின் ஆரம்பம் இது. அவர்கள் தமது இருப்பையே பாதுகாக்க முயற்சிக்கின்றனர். இரத்தவெறி கொண்ட அரச இராணுவம் அன்று சிங்கள இளைஞர்களையும் இன்று தமிழர்களை யும் ருசிக்கின்றது வி.புலிகனை விட்டுவிட்டு அரசு பலவற்றை செய்திருக்க முடியும். ☑


# மக்கள் சேவையே அப்பன் விநாயகன் சேவை

# சமூகப்பணிகளில்

## கற்பக விநாயகர் ஆலயம்

£40000 தாயகத்திற்கு அனுப்பி உதவியது. ( கார்ள்டன் ரவல்ஸின் உதவியுடன் )

திருக்கோயிலில் உள்ள குருகுலத்தில் 36 சிறார்களை ஆலயம் பராமரிக்கிறது.

தேர்த்திருவிழாவில் சேரும் நிதி வெண்புறாத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

மட்டக்களப்பில் £27000 செலவில் முதியோர் இல்லம்

தமிழ் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு £2000 வழங்கப்பட்டது.

முத்தோர் நலன்புரி நிலையம் நடாத்தப்படுகிறது.

இலக்கிய முயற்சிகளுக்கு உதவி வருகிறது.

**உங்கள் பங்களிப்பைச் செய்ய விரும்புபவர்கள் கற்பக விநாயகர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX**

**Tel : 020 8527 3819**

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



Immigration & Nationality

Employment

Landlord & Tenant

Housing

Welfare Benefits

Matrimonial

**1ST Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**



இந்த இலங்கையர் எங்களுடன் கதைத்தார். நாங்கள் அவர் கொழும்புக்கு திரும்பிச் செல்லவும் மீன் வியாபாரத்தை ஆரம்பிக்கவும் உதவி செய்தோம். பின்சுனாமி வந்து அவருடைய வியாபாரத்தை அழித்தது. எங்கள் மேலதிக நிதி உதவியுடன் அவர் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பித்து தற்போது வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.


IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
Tel: 020 7233 0001
Fax: 020 7233 3001
www.iomlondon.org


# நீங்கள் உங்கள்நாட்டுக்கு திரும்பிச் செல்வதைப் பற்றி எண்ணுகிறீர்களா? எங்களுடன் பேசுங்கள். எங்களால் உங்களுக்கு உதவி செய்யக்கூடியதாக இருக்கும்.

நீங்கள் ஐக்கிய ராஜ்ஜியத்தில் தஞ்சம்கோரியவராக இருந்து உங்களநாட்டுக்கே திரும்பிச் செல்வது பற்றி எண்ணினால் எங்களால் அந்த உதவி செய்ய முடியும்.

- நாங்கள் உங்கள் பயணத்துக்கான விமானச்சீட்டை பெற்றுத்தருவோம்.
- நாங்கள் ஐக்கிய ராஜ்ஜியத்திலும் உங்கள் நாட்டிலும் ஏற்படும் உள்நாட்டு போக்குவரத்து செலவையும் வழங்குவோம்.
- நாங்கள் உங்கள் பயண ஆவணம் தொடர்பாகவும் ஆலோசனை வழங்குவோம்.
- நாங்கள் பயணம் அனுப்புவதிலும் வரவேற்பதிலும் உங்களுக்கு விமான நிலையத்தில் உதவுவோம்.
- நாங்கள் உங்கள் பயணத்திற்கு தேவையான மருத்துவ உதவிகளையும் வழங்குவோம்.

உங்கள் நாட்டுக்கு சுயவிருப்பில் திரும்பிச் செல்வதற்கு

**31 ஒக்ரோபர்2006**

இற்கு முன் விண்ணப்பித்தால் நீங்கள் மொத்தமாக குடும்ப உறுப்பினருக்கு

**3000 பவுண்**

உதவியை பெறத்தகுதி உடையவர்கள் ஆவீர்கள்.
(குறிப்பு 31 டிசம்பர் 2005க்கு பின் தஞ்சத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு 1000 பவுண் வழங்கப்படும்)

மேலதிக விபரங்களுக்கு IOM உடன் தொடர்பு கொள்ளவும் 0800 783 2332


This programme is co-financed by the European Refugee Fund